தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

23.05.2013 A.M

## விதை முளைப்புத் திறன்

விதை முளைப்புத் திறனை அறிந்து விவசாயிகள் நிறைந்த லாபம் பெறலாம் என்று திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் மூ.மு. முகம்மது காசீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயத்தின் அடிப்படை இடுபொருளான விதை தரமானதாக இருந்தால்தான் அதைப் பயன்படுத்தி மகசூல் பெறும் விவசாயிகளின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். நல்விதை என்பது அதிக முளைப்புத் திறன் கொண்டதாகும். திருநெல்வேலி விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைகளின் முளைப்புத் திறன் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. முளைப்புத் திறன் என்பது விதையானது உயிரும் வீரியமும் கொண்டு இயங்குவதைக் காட்டுவதாகும். நல்ல முளைப்புத் திறன் கொண்ட விதைக் குவியல்களில் இருந்து விதைக்கப்படும் விதை மூலம் நிறைவான பயிர் எண்ணிக்கையில் வயலில் பயிர்கள் செழித்து வளரும். ஆனால், அதே சமயம் முளைப்புத் திறன் குறைந்த விதைகளைப் பயன்படுத்தினால் குறைந்த எண்ணிக்கையிலேயே பயிர்கள் வளரும். அதனால் பயிர் மகசூல் பாதிக்கப்படும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7இன்படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத் திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மக்காச்சோளம் - 90 சதவிகிதம், நெல், கொள்ளு, எள், சணப்பு - 80 சதவிகிதம், சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து - 75 சதவிகிதம், நிலக்கடலை, சூரியகாந்தி, கத்தரி, தக்காளி, முருங்கை, கீரை - 70 சதவிகிதம், பருத்தி, வெண்டை - 65 சதவிகிதம், பூசணி, புடலங்காய், தடியங்காய், பாகல், மிளகாய், சுரை, தர்பூசணி - 60 சதவிகிதம் முளைப்புத் திறன் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

பயிர்களுக்கு ஏதுவான சூழ்நிலையில் விதையின் கரு முளைவிட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குரிய திறனே முளைப்புத் திறன்

ஆகும். முளைப்புத் திறன் சோதனையின்போது இயல்பானது, இயல்பற்றது, கடினமானது, உயிரற்றது என்று 4 வகைப்படுத்தி சோதனை முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

எனவே, விவசாயிகள் தங்கள் விதைகளின் முளைப்புத் திறனை அறிந்துகொள்ள விதை மாதிரியுடன் ரூ.30 கட்டணமும் அனுப்பினால் விதைமாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்றார் அவர்.

## மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பங்கள்



திருநெல்வேலி: மஞ்சள் சாகுபடி முறைகள் குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு.பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மஞ்சள், நம் வாழ்வின் மங்கல நிகழ்வுகளிலும், இறை வழிபாட்டிலும் இரண்டறக் கலந்த ஒன்றாகும். சமையலிலும், மருத்துவத்திலும் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. உலக மஞ்சள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. இந்தியாவில் 2,500 ஆண்டுகளாக இது பயிரிடப்பட்டு, இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதத்திலும், சித்த மருத்துவத்திலும் மகத்தான பங்கு வகிக்கிறது. "குர்குமா டொமெஸ்டிகா' என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட மஞ்சளின் மருத்துவ மகிமைகள் ஏராளம்.

மருத்துவ மகிமைகள்: மஞ்சள் நல்லதொரு கிருமி நாசினி என்பதால் வெட்டுக் காயங்களும், தீக்காயங்களும் விரைவில் குணமாக உதவுகிறது. புண்களைக் குணமாக்குவதில் பக்கவிளைவின்றி செயல்படுகிறது. இயற்கையான வலி நிவாரணி. செரிமானக் குறைபாடுகளை நீக்குகிறது. கொழுப்புச் சிதைவில் உதவி சீரான எடைக் குறைப்புக்கு உறுதுணையாகிறது. இயற்கையான முறையில் கல்லீரல் நச்சை நீக்குகிறது. தோல் நோய்களுக்கு நிவாரணமளிக்கிறது. வயது முதிர்வைத் தடுக்கிறது.

மன இறுக்கத்துக்கு மருந்தாக சீன மருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதவிடாய்க் கோளாறுகளை சரிசெய்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது. பல்வகைப் புற்றுநோய்கள் வருவதைத் தடுக்கவும், அவை பரவுவதை தள்ளிப்போடவும் செய்கிறது. எலும்புச் சிதைவு நோய்க்கு அணை போடுகிறது. வயது முதிர்வின் காரணமாக வரும் "அல்சீமியர்' என்ற மறதி நோயைத் தடுக்கவும், தாமதப்படுத்தவும் உதவுகிறது.

இத்தகைய மருத்துவப் பயன்கள் கொண்ட மஞ்சள் பயிர், தைப்பொங்கல் மஞ்சள் குலைகளுக்காகவும், மஞ்சளுக்காகவும் திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பயிரிடப்படுகிறது.

சாகுபடி முறைகள்: ரகங்கள் - கோ-1, பவானிசாகர்-1, 2, ரோமா, சுவர்ணா, சுதர்ஷயா, ரங்கா, ராஷ்மி, ராஜேந்திர சோனியா, கிருஷ்ணா, சுகுணா, சுகந்தம், சுரோமா, ஆலப்புழா, ஐஐஎஸ்ஆர் பிரதிபா, ஐஐஎஸ்ஆர் ஆலப்பி, ஐஐஎஸ்ஆர் கெடாரம், ஈரோடு மற்றும் சேலம் மஞ்சள்.

பருவம்: தமிழ்நாட்டில் மே-ஜூன் மாதம் மிகவும் ஏற்ற பருவமாகும்.

மண் மற்றும் தட்பவெப்பம்: மஞ்சள் ஒரு வெப்பமண்டலப் பயிர். நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண் மற்றும் இருமண்பாடு நிலம் மிகவும் ஏற்றது.

நிலம் தயாரித்தல்: நிலத்தை 3 அல்லது 4 முறை உழுது பண்படுத்தி, கடைசி உழவின்போது ஏக்கருக்கு 4 மெ.டன் மக்கிய தொழு உரம் இட்டு மண்ணுடன் நன்கு கலக்க வேண்டும். நிலத்தைச் சமப்படுத்திய பின் 45 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும்.

விதையளவு: ஏக்கருக்கு 800 கிலோ விரலி மற்றும் குண்டு விதை மஞ்சள்.

விதைநேர்த்தி: கிழங்கு அழுகல் நோய் வராமல் தடுக்க விதைக் கிழங்குகளை ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் கார்பண்டசிம் கலந்த கரைசலில் 10 நிமிடம் ஊறவைத்து நிழலில் உலர்த்தி ஊன்ற வேண்டும்.

விதைப்பு: நீர்ப்பாசனம் செய்து விதை மஞ்சளை பார்களின் ஓரத்தில் 15 செ.மீ. இடைவெளியில் 4 செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும்.

ஒருங்கிணைந்த உர மேலாண்மை: அடியுரமாக கடைசி உழவில் ஏக்கருக்கு 4 டன் தொழு உரத்துடன், 80 கிலோ வேப்பம்புண்ணாக்கு அல்லது கடலைப் புண்ணாக்கு, 10 கிலோ தழைச்சத்து தரவல்ல 22 கிலோ யூரியா, 24 கிலோ மணிச்சத்து தரவல்ல 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ சாம்பல்சத்து தரவல்ல 14 கிலோ பொட்டாஷ் உரங்களை இடவேண்டும்.

விதைக்கும் முன், ஏக்கருக்கு 12 கிலோ இரும்பு சல்பேட், 6 கிலோ துத்தநாக சல்பேட் இடவேண்டும். விதைத்த ஒரு மாதம் கழித்து ஏக்கருக்கு 4 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 4 கிலோ பாஸ்போபாக்டீரியா இடவேண்டும்.

மேலுரம்: மஞ்சள் ஊன்றிய 30, 60,90,120 மற்றும் 150-ம் நாள்களில் ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 14 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவேண்டும்.

இலைவழி நுண்ணூட்டம் அளித்தல்: கிழங்கு பெருக்கும் தருணத்தில் நுண்ணூட்ட குறைபாடுகளைச் சரிசெய்ய 6 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் ஒரு நாள் இரவு ஊறவைத்து, மறுநாள் காலையில் தெளிந்த நீரை எடுத்து, 90 லிட்டர் தண்ணீர் சேர்த்து, 100 லிட்டர் கரைசலாக்கி, அக்கரைசலில் 150 கிராம் இரும்பு சல்பேட், 150 கிராம் துத்தநாக சல்பேட், 150 கிராம் போராக்ஸ், 150 கிராம் யூரியா கலந்து மாலையில் இலைவழி தெளிக்க வேண்டும். தேவைக்கேற்ப 25 நாள்கள் இடைவெளியில் இருமுறை இவ்வாறு தெளிக்கலாம்.

ஊடு பயிர்: வெங்காயம், கொத்தமல்லி ஆகியவற்றை 10 செ.மீ. இடைவெளியிலும், துவரை, ஆமணக்கு போன்றவற்றை அதிக இடைவெளியிலும் ஊடுபயிராக சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெறலாம்.

களை நிர்வாகம்: விதை ஊன்றிய 30, 50, 120, 150-ஆம் நாள்களில் களையெடுக்க வேண்டும்.

மண் அணைத்தல்: 2-ஆவது மேலுரம் மற்றும் நான்காவது மேலுரம் இட்டவுடன் அவசியம் மண் அணைக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்: மஞ்சள் நடவுக்கு முன்பும், நட்ட 3-ஆம் நாள் உயிர் தண்ணீராகவும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர், மண்ணின் தேவைக்கேற்ப வாரம் ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

1. பூச்சிகள்:

அ. இலைப்பேன்- இதை கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2 மிலி டைமிதியேட் அல்லது மிதைல் ஒ டெமெட்டான் கலந்து தெளிக்கவும்.

ஆ. கிழங்கு செதில் பூச்சி - ஏக்கருக்கு மக்கிய ஆட்டு எரு அல்லது கோழி எரு 2 டன் அடியுரமாகவும், 2 டன் மண் அணைக்கும்போதும் இடுவதும் இதைக் கட்டுப்படுத்த உதவும். கிழங்கு ஊன்றுமுன் ஒரு லிட்டர் நீருக்கு 2 மிலி பாசலோன் கலந்த கரைசலில் 15 நிமிடம் ஊறவைத்து ஊன்றுவதும் இப்பூச்சி தாக்குதலைத் தடுக்க உதவும். வயலில் கிழங்கு செதில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 2 மிலி டைமிதியேட் அல்லது பாசலோனன் கலந்த கரைசலை வேர்ப்பாகம் நன்கு நனையும்படி ஊற்றவும்.

இ. நூற்புழு - வயலில் நூற்புழு தாக்குதல் காணப்படுமானால் வாழை, கத்தரி குடும்பப் பயிர்களுக்குப் பின், மஞ்சள் பயிரிடுவதைத் தவிர்க்கவும், செண்டுமல்லி எனப்படும் கேந்தி மலரை வயல் ஓரங்களில் பயிரிட்டால் நூற்புழு தாக்குதல் குறையும். நூற்புழு தாக்குதலைக் குறைக்க அடியுரமாக ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். மேலுரமாக ஒவ்வொரு முறை யூரியா இடும்பொழுதும் ஏக்கருக்கு 2 கிலோ வேப்பம் புண்ணாக்கு சேர்த்து இடவேண்டும்.

2. நோய்கள்: அ. கிழங்கு அழுகல் நோய் - இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு இரண்டரை கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு கலந்த கரைசலை வேர்ப்பகுதி நன்கு நனையும்படி ஊற்றவும்.

ஆ. இலைத்தீயல் மற்றும் இலைப்புள்ளி நோய் - பாதிக்கப்பட்ட இலைகளைக் கிள்ளி எரித்துவிட வேண்டும்.

இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 கிராம் கார்பண்டசிம் அல்லது 400 கிராம் மாங்கோசெப் அல்லது 500 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு மருந்துகளில் ஒன்றைத் தெளிக்கவும். நோயின் தீவிரத்தைப் பொறுத்து 10 முதல் 15 நாள்கள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை மருந்துகளை மாற்றி மாற்றித் தெளிக்க வேண்டும்.

அறுவடை மற்றும் மகசூல்: 9-ஆம் மாதத்தில் மஞ்சள் பயிர் சாய ஆரம்பிக்கும். இலைகள் மஞ்சளாவதும், காய்வதும் அறுவடைக்கான அறிகுறிகளாகும். பச்சை மஞ்சள் ஏக்கருக்கு 10 முதல் 12 டன் வரை கிடைக்கும்.

விவசாயிகள் இத்தகைய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து மருத்துவப் பயன் கொண்ட மஞ்சள் சாகுபடியை மேற்கொணடு உன்னத லாபம் பெறலாம் என்றார் தி.சு.பாலசுப்பிரமணியன்.

## பாரம்பரிய வேளாண் பொருள்கள் கருத்தரங்கு

கலசப்பாக்கம், போளூர் வேளாண்மைத் துறை சார்பில் பாரம்பரிய வேளாண் பொருள்கள் குறித்த கருத்தரங்கு ஜமுனாமரத்தூரில் உள்ள சமுதாயக் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்ச்சிக்கு ஒன்றியக் குழுத் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். கலசப்பாக்கம்

வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரம், போளூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலசப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரம் பேசும்போது, பாரம்பரிய சிறுதானியப் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, தினை மற்றும் பருத்தி, இளநீர், சீயக்காய் ஆகியவற்றை உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

ஒன்றியக் குழு துணைத் தலைவர் ராமகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி, வேளாண்மை துறை அலுவலர்கள் வசந்தி, அழகேசன், மரியஜோசப், சிவராமன், குப்புசாமி, சுப்பிரமணி, பாண்டு, சிவப்பிரகாசம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## உழவர் பெருவிழா நிறைவு

செங்கம் மற்றும் புதுப்பாளையம் பகுதிகளில் உழவர் பெருவிழா நிறைவு விழா நிகழ்ச்சிகள் திங்கள்கிழமை நடைபெற்றன.

செங்கம் வேளாண்மைத் துறை சார்பில் பக்கிரிபாளையம் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு செங்கம் ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கணேசன் தலைமை வகித்தார். தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி (பாய்ச்சல்), முருகன் (செ.சொர்ப்பனந்தல்), மகரிஷி பள்ளி தாளாளர் மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் மாரியப்பன் வரவேற்றார்.

மாவட்ட வணிகவரித் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர்.மதியழகன், விவசாயிகளுக்கு மானியத்தில் விவசாயக் கருவிகளை வழங்கிப் பேசினார்.

வேளாண்மை துறை துணை அலுவலர் ஜெயசீலன், உதவி அலுவலர்கள் சங்கர், சரவணன், தோட்டக்கலைத் துறை அலுவலர் பாலமுருகன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

புதுப்பாளையத்தில்...

புதுப்பாளையம் வேளாண்மைத் துறை சார்பில் ஒரவந்தவாடி கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் பழனிராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் விஜயா குப்பன், கவுன்சிலர் மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் வெங்கடேசன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் செல்வபாண்டியன், விவசாயிகளுக்கு மானியத்தில் விவசாயக் கருவிகளை வழங்கிப் பேசினார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் கோவிந்தராஜ், சேகரன், சசிகுமார், சங்கர், தண்டபாணி மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

## எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.1 லட்சம் கோடி மானியம்: மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல்

எண்ணெய் நிறுவனங்களுக்கு கடந்த 2012-13 நிதியாண்டுக்கான எரிபொருள் மானியமாக ரூ.1 லட்சம் கோடி வழங்க மத்திய நிதியமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளது.

எனினும், மானியச் செலவைக் குறைக்கும் வகையில் நடப்பு நிதியாண்டு முதல் விலை நிர்ணய முறையை மாற்றி அமைக்குமாறு பெட்ரோலிய அமைச்சகத்தை நிதியமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

2012-13 நிதியாண்டில், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றை சந்தை விலையைவிடக் குறைவாக விற்பனை செய்ததில் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.1.61 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டது. இதில் ரூ.55,000 கோடியை எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஏற்கெனவே வழங்கியது.

இந்நிலையில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய 3 எண்ணெய் நிறுவனங்களின் கடந்த நிதியாண்டு கணக்கை இம்மாத இறுதியில் முடிக்க வேண்டியிருப்பதால் மீதமுள்ள இழப்புத் தொகையை வழங்குமாறு பெட்ரோலிய அமைச்சகம் கோரி வந்தது.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், பெட்ரோலியத் துறை அமைச்சர் வீரப்ப மொய்லி ஆகியோருடன் பிரதமர் மன்மோகன் சிங் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார். இதில், பெட்ரோலிய அமைச்சகத்துக்கு கடந்த நிதியாண்டுக்கு மொத்தம் ரூ.1 லட்சம் கோடி தருவது தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் ஏற்கெனவே ரூ.55,000 கோடி வழங்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள ரூ.45 ஆயிரம் கோடியை பெட்ரோலிய அமைச்சகத்துக்கு நிதியமைச்சகம் விரைவில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப் பிறகும் எண்ணெய் நிறுவனங்களின் இழப்பு ரூ.61 ஆயிரம் கோடியாக இருக்கும்.

## மரபணு தாவர விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை: மத்திய அரசு உறுதி



மரபணு தாவர உற்பத்தியில் கவனம் செலுத்தும் விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய வேளாண், உணவுப் பதப்படுத்தல் மற்றும் தொழிற்சாலைகள் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர் கூறினார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மரபணு தாவரவளங்களின் பராமரிப்பில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் விவசாயிகளுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தாரிக் அன்வர் பேசியதாவது:

மரபணு தாவரங்கள் மலிவானவை. மாறிவரும் வேளாண் பருவச் சூழல்களுக்குத் தக்கவாறு உயிரி சார்ந்த, உயிரி சாராத தன்மை வாய்ந்த மரபணுத் தாவரங்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டும்.

இந்த முயற்சியில் தாவர வகைகள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை ஆணையம் (பிபிவி அண்ட் எஃப்ஆர்) வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

மரபணுத் தாவரங்கள் தேச வேளாண் வளர்ச்சிக்கும் முக்கியமானவையாக விளங்கும். அதைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபடும் விவசாயிகளைக் கண்டறிந்து ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து அவர்களுக்கு சமூகத்தில் உரிய மதிப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார் தாரிக் அன்வர்.

நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தீபஒளி சுய உதவிக் குழு உள்பட நான்கு வகை வேளாண் தொழிலில் ஈடுபடும் விவசாய சமூகத்துக்கு விருதுகள், ரூபாய் 10 லட்சம் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அவற்றின் விவரம் வருமாறு (அடைப்புகுறியில் ஊர், மாநிலம்): விதை பாதுகாக்கும் விவசாயிகள் குழு (புணே, மகராஷ்டிரம்); சஞ்சீவினி கிராமப்புற மேம்பாட்டுச் சமூகம் (விசாகப்பட்டினம், ஆந்திரம்); தீபஒளி மகளிர் சுய உதவிக் குழு (திருவண்ணாமலை, தமிழ்நாடு); அகம்படம் சிம்பசாலா புஞ்சக்காடு சமிதி (பாலக்காடு, கேரளம்).

மேலும், மரபணுத் தாவரப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்ட 10 விவசாயிகளுக்கு தலா ரூ. ஒரு லட்சம் வெகுமதி வழங்கப்பட்டது.

**திருவண்ணாமலை குழுவுக்கு விருது கிடைத்தது எப்படி?**


திருவண்ணாமலை தீபஒளி சுய உதவிக் குழுவுக்கு விருது கிடைத்தது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சிறுதானியத் துறை பேராசிரியர் ஏ. நிர்மலாகுமாரி கூறியது:

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உயர் விளைச்சல் தரும் சாமை விதைகளான கோ 2, கோ 3, கோ 4 ஆகிய ரகங்களை உருவாக்கியுள்ளோம். அவற்றை விவசாயிகளுக்கு அளிக்கும் போது, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள ஜமுனாமரத்தூர் பகுதியில் பாரம்பரிய சாமை விதைகளைப் பாதுகாத்து வருவது தெரிய வந்தது.

அந்த பாரம்பரிய சாமை விதைகளை மலைவாழ் இனத்தைச் சேர்ந்த 11 பெண்கள் பாதுகாத்து வருகின்றனர். அவர்கள் தீபஒளி சுய உதவிப் பெண்கள் குழுவைச் சேர்ந்தவர்கள். அந்தக் குழுவுக்கு பத்மாவதி தலைவியாக உள்ளார். திணைப் பயிரான சாமையை அவர்கள் விளைவித்து வருகின்றனர்.

ஜமுனாமரத்தூர் பகுதியில் உள்ள சாமை பயிர்களை மத்திய அரசு அதிகாரிகள் பார்வையிட்டனர். அதையடுத்து பாரம்பரிய சாமை விதைகளைப் பாதுகாத்து வருவதற்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

## குறுவைச் சாகுபடி பொய்க்கும் அபாயம்: கருணாநிதி எச்சரிக்கை



காவிரி டெல்டா பகுதிகுகளில் இந்த ஆண்டும் குறுவைச் சாகுபடி பொய்க்கக்கூடிய சூழல் நிலவுவதாக திமுக தலைவர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

அதிமுக ஆட்சியில் அத்தியாவசியப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இது தொடர்பாக தமிழக அமைச்சர்களிடம் கேட்டால், சந்தையில் விலை உயர்ந்தால்தான் வீட்டில் யாரும் சமைக்காமல் அம்மா உணவகங்களில் சாப்பிட வருவார்கள் என்று கூறுவர்.

அதிமுக தேர்தல் அறிக்கையில் 58 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் உள்ளூர் மற்றும் அரசுப் பஸ்களில் பஸ் பாஸ் வழங்கப்படும் என்று கூறியிருந்தனர். ஆனால் இதுவரை முதியோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படவில்லை.

110-வது விதியின் கீழ் 100-க்கும் மேற்பட்ட அறிக்கைகளை முதல்வர் ஜெயலலிதா படித்துள்ளார். அதில்கூட முதியோருக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுவது பற்றிய அறிவிப்பு இல்லை.

திமுக மீதான காழ்ப்புணர்வின் காரணமாக இலவச வண்ணத் தொலைக்காட்சி திட்டத்தையே அதிமுக அரசு கிடப்பில் போட்டுள்ளது.

2006-2011 வரையான திமுக ஆட்சியில் ரூ.3,907 கோடியில் 1.65 கோடி வண்ணத் தொலைக்காட்சிகள் கொள்முதல் செய்யப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டன.

அதில் 2011 மார்ச் மாதம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துவிட்டதால் 1.27 லட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படாமல் மிச்சம் வைக்கப்பட்டன.

அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் மையங்களுக்கு வழங்கப்படும் என்று அதிமுக அரசு அறிவித்து அரசாணையும் பிறப்பித்தது.

ஆனால் அவற்றை வழங்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் மதிப்பு ரூ.22.82 கோடியாகும்.

திமுக ஆட்சியில் 2006-11-ஆம் ஆண்டு வரை குறுவைப் பயிரும், சம்பா பயிரும் பொய்த்ததில்லை. ஆனால் தற்போதைய ஆட்சியில் தொடர்ச்சியாக இரண்டாம் ஆண்டாக டெல்டா மாவட்டங்களில் சாகுபடி பொய்த்துப் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துபோய் உள்ளதால் சாகுபடிக்கு அணையை திறந்துவிடுவதற்கு வாய்ப்பு இல்லை.

ஆனால் ஆட்சியாளர்களோ காவிரி வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதுவதோடு தங்கள் பணியை முடித்துக் கொள்கின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.05.2013 A.M**

---

## நடப்பாண்டு குறுவை சாகுபடியை தவிர்க்கணும் வேளாண் பல்கலை துணைவேந்தர் யோசனை

தஞ்சாவூர்: ""தமிழகத்தில், நடப்பாண்டு குறுவை சாகுபடியை தவிக்க வேண்டும்," என்று கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசினார்.

தஞ்சையில், காட்டுத்தோட்டம் மண்நீர் மேலாண் மற்றும் ஆராய்ச்சி மையத்தில், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுனர் பேரவை சார்பில், மேட்டூர் நீர்ப்பாசன பகுதி நீர்வழங்கல் திட்டம் குறித்து, கையேடு வெளியிடும் விழா நடந்தது.

இதில், பேரவை தலைவர் கலைவாணன் தலைமை வகித்தார். செயலாளர் பாலசுப்பிரமணியன், உறுப்பினர் பழனியப்பன் முன்னிலை வகித்தனர். கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பங்கேற்று, கையேடு வெளியிட்டு பேசியதாவது:

காவிரி படுகையில், நடப்பாண்டு மழை அளவு குறையும் என, வானியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதேசமயத்தில் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது. அதனால், காவிரி படுகையில் ஒருபோக நெல் சாகுபடி மட்டுமே செய்ய வேண்டும்.

மழைநீரை பயன்படுத்தி பயறு வகைகள், சிறுதானியங்கள் சாகுபடி செய்ய வேண்டும்.

பொதுவாக, இரண்டு மூன்று முறை மழைபெய்தால் போதும் 60 நாட்களில், சிறுதானியங்கள் அறுவடைக்கு வந்து விடும், பயிறு வகைகள் 55 நாட்களில் அறுவடையாகி விடும்.

நடப்பாண்டு ஃபோர்வெல் மூலம் நிலத்தடி நீரை பயன்படுத்தி குறுவை, சம்பா, கோடை கால பயிர்களை சாகுபடி செய்துள்ளோம். இந்நிலையில், மீண்டும் நிலத்தடி நீரை பயன்படுத்தி, நெல் பயிரிட்டால் நிலத்தடி நீர் குறைந்து, கடல் நீர் நிலங்களில் உட்புகும் வாய்ப்பும் உள்ளது.

அதனால், இந்த ஓராண்டு மட்டும் நிலத்தடி நீரை பயன்படுத்தி குறுவை சாகுபடி செய்யாமல் இருந்தால், எதிர்வரும் 10 ஆண்டுக்கு அது பெரும் பயனை, விவசாயத்துக்கு அளிக்கும். இதை கருத்தில் கொண்டு, நடப்பாண்டு குறுவை சாகுபடியை விவசாயிகள் தவிர்க்க வேண்டும்.

சம்பா சாகுபடியில் 50 சதவீதம் நேரடி நெல் விதைப்பு செய்ய வேண்டும். இவ்வாறு, செய்வதன் மூலம் பயன்படுத்தும் நீரின் அளவு குறையும். விளைச்சலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

கர்நாடகாவில் மத்திய அரசின் நிதியை பயன்படுத்தி, நீர்நிலைகளை தூர்வாரி, அணைகளை கட்டி நீரை தேக்கி வைத்துள்ளனர். இவ்வாறு, நாம் செய்வதற்கு தவறி விட்டோம்.

தமிழகத்தில், டெல்டா பாசன பகுதியில் மேம்பாட்டு திட்டத்துக்கு 1,920 கோடி ரூபாயும், மற்ற பகுதிகளுக்கு 1,200 கோடி ரூபாயும் நிதியை ஒதுக்கி, தமிழக அரசு திட்டம் தயாரித்துள்ளது. இதன்மூலம் நீர்நிலைகள் தூர் வாரி, பராமரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்கு கடற்கரை ஓரங்களில் மரங்கள் அதிகளவில் வளர்ந்துள்ளன. இதேபோல, கிழக்கு கடற்கரை ஓரங்களில் பனை மரம் போன்ற வேர் பிடிமானம் அதிகமுள்ள மரங்களை நட்டு வளர்ப்பது அவசியம். இதனால், புயல்சேதம் பெருமளவு ஏற்படுவதை தவிர்க்க முடியும். மழை பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் துணை இயக்குனர் (பொ) ராமதாஸ் நன்றி கூறினார்.

## பழநியில் "மா' விளைச்சல் அதிகரிப்புவிலை குறைவு; விவசாயிகள் கவலை

பழநி:பழநி வட்டாரத்தில் மா தோப்புகளில் மாங்காய் காய்ப்பு அதிகரித்துள்ளதால், சந்தையில் விலை குறைந்துள்ளது. எதிர்பார்த்த விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பழநி சுற்றுவட்டாரத்தில், பாலசமுத்திரம், சட்டப்பாறை, ஆயக்குடி, தொப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி, தேக்கந்தோட்டம் ஆகிய இடங்களில் மாந்தோப்புகள் உள்ளது. இந்தாண்டு மா மரங்களில் காய்காய்ப்பு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஆயக்குடி சந்தையில் கடந்த மாதம், கிலோ 30 முதல் 45 வரை விற்கப்பட்ட கல்லா மாங்கய் தற்போது கிலோ 8 முதல் 10 வரை விற்கப்படுகிறது. மல்கோவா, பங்கனபள்ளி, காவரை மாம்பழங்களின் விலையும் கிலோ ரூ.40ல் இருந்து ரூ.18 முதல் 20 ரூபாயாக குறைந்துள்ளது.விவசாயி சிவசுப்ரமணி கூறுகையில்,"" கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாங்காய் காய்ப்பு அதிகரிப்பு காரணமாக, சந்தையில் மாங்காய், மாம்பழம் விலை குறைந்துள்ளது. மல்கோவா மாம்பழம் கிலோ 30 ரூபாயும், செந்தூர் மாம்பழம் 25 ரூபாயும், இமாம்பசந்த் கிலோ 35 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கல்லா மாங்காய் கிலோ 8 முதல் 10 வரை விற்கிறோம். எதிர்பார்த்த அளவிற்கு விலை கிடைக்கவில்லை," என்றார்.

## அதிகபட்ச விலையில் தக்காளிகொள்முதல் செய்வது தவிர்ப்பு

திண்டுக்கல்:அதிகபட்ச விலை காரணமாக பிற மாநிலங்களில் இருந்து தக்காளி கொள்முதல் செய்வதை வியாபாரிகள் தவிர்த்திருப்பதால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.திண்டுக்கல் காந்தி

மார்க்கெட்டிற்கு தக்காளி, ஆந்திராவிலிருந்து அதிக அளவில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. மழை இல்லாததால் ஆந்திராவில் தக்காளி கிலோ ரூபாய்40 க்கு விற்கப்படுகிறது. மொத்த கொள்முதல் செய்யும் வியாபாரிகளுக்கும் இதே விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது காந்தி மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.50 க்கு விற்கப்படுகிறது. கடந்த பிப்ரவரி வரை கிலோ ரூ.10 க்கு விற்கப்பட்டு வந்த தக்காளி, இரண்டு மாதங்களாக கிலோ ரூ.50 க்கு விற்கப்படுவதால் வாடிக்கையாளர்கள் தக்காளி வாங்க தயக்கம் காட்டினர்.இந்த நிலையில், ஆந்திராவிலிருந்து தக்காளி கொள்முதல் செய்தால் போக்குவரத்து, பராமரிப்பிற்காக அதிக கட்டணம் நிர்ணயிக்க நேரிடும். ஏற்கனவே, தக்காளி வாங்குவதில் தயக்கம் காட்டி வரும் வாடிக்கையாளர்கள், இதற்கு மேல் விலை நிர்ணயித்தால் வாங்க முன்வரமாட்டார்கள். இதனால் நஷ்டம் ஏற்படும் என்பதால், தக்காளி கொள்முதல் செய்வதை பெரும்பாலான வியாபாரிகள் தவிர்த்துள்ளனர். இதனால் காந்தி மார்க்கெட்டில் தக்காளிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதே நேரம் விலை உயர்வு காரணமாக குறைந்த அளவிலேயே தக்காளிகளை வாங்கிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

## உழவர் பெருவிழாவில் செயல்முறை விளக்கம்

கம்பம்:பாரம்பரிய உணவு பொருட்களில் இருந்து, சத்து மாவு தயாரித்தல், பயன்படுத்துதல், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து, கம்பத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் விளக்கப்பட்டது. பாரம்பரிய உணவு வகைகளான கேழ்வரகு, கம்பு, ராகி, சோளம் போன்றவற்றின் சாகுபடி குறைந்து விட்டது. பொதுமக்கள் பயன்படுத்துவதும் இல்லை.நமது பாராம்பரிய உணவு வகைகளை பயன்படுத்தி, உடல் ஆரோக்கியத்துடன் வாழ தமிழக முதல்வர் வேண்டுகோள் விடுத்தார். உழவர் பெருவிழாக்களில் இது தொடர்பான விழிப்புணர்வு பிரசாரம் செய்யவும் கேட்டுக் கொண்டார்.அதன்படி, கம்பத்தில் நடந்த உழவர் பெருவிழாவில், மனித வளமேம்பாட்டுகழக இயக்குநர் இளங்கோவன், பாரம்பரிய பயிர்களில் இருந்து, சத்து மாவு தயாரித்தல் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். அதன் பயன்கள் பற்றியும் விளக்கினார். விழாவில் கலந்து கொண்ட கலெக்டர் பழனிச்சாமி, " பாரம்பரிய உணவு பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க, விவசாயத்துறை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்'. இணை இயக்குனர் சுந்தரம், ஊராட்சி ஒன்றிய தலைவர் தங்கமுருகன், விவசாய சங்க தலைவர் நாராயணன், நீரினை பயன்படுத்துவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி இயக்குநர் அசோகன் செய்திருந்தார்.

## விவசாயிகளுக்கு பரிசு மழை

கம்பம்:கொடைக்கானலில் நடைபெற்ற 52 வது மலர் கண்காட்சியில், கம்பம் பகுதி விவசாயிகளுக்கு, மூன்று முதல் பரிசுகளும், ஒரு இரண்டாம் பரிசும் கிடைத்தது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்பட்டன. கொடைக்கானலில், ஆண்டுதோறும் மலர் கண்காட்சி நடைபெறும். இதில் பல்வேறு போட்டிகள் நடைபெறும். இந்த ஆண்டு திராட்சை, வாழை, பப்பாளி பயிர்களில் சிறப்பாக சாகுபடி செய்து, தரமான பழங்களை விளைவித்த காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி விவசாயிகளுக்கு நான்கு பரிசுகள் கிடைத்தன. முதல் பரிசுகள் மூன்றும், ஒரு இரண்டாம் பரிசும் கிடைத்தது. இதற்கான கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை, கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ராஜன், தோட்டக்கலை அலுவலர் மனோகரன் ஆகியோரிடம் வழங்கினார்கள். விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை எடுத்துரைத்து, வழிகாட்டிய அதிகாரிகளும் பாராட்டப்பட்டனர்.

## கோடைமழை இல்லாமல்வாடும் மானாவாரி பயிர்கள்

தேனி:தேனி மாவட்டத்தில் கோடை மழை சரியாக பெய்யாததால், மானாவாரி பயிர்கள் நீரின்றி வாடுகின்றன. மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக சரியாக மழை பெய்யவில்லை. நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதம், ஒரு வாரம் வரை தொடர்ந்து கோடை மழை பெய்தது. இந்த கோடை மழை தொடரும். அடுத்து விரைவில் பருவமழை தொடங்கி விடும் ,என நினைத்து பல ஆயிரம் ஏக்கரில், பருத்தி, சோளம், கம்பு, பாசிப்பயறு, மக்காச்சோளம், குதிரைவாலி உட்பட பல மானாவாரி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, இந்த பயிர்கள் முளைவிடும் பருவத்தில், உள்ளன. இதற்கு கண்டிப்பாக மழை தேவைப்படுகிறது. பருவமழை குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கும், என்ற நம்பிக்கை இருந்தாலும், தற்போது கோடை மழை இல்லாததால், இந்த பயிர்கள் வாடி வருகின்றன. இன்னும் ஒரு வாரத்திற்குள் மழை பெய்யாவிட்டால், பெருமளவு பயிர்கள் வாடி வீணாகி விடும், என்று விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## வயல்வெளிகளில் செம்மறி ஆட்டு பட்டி இயற்கை உரத்துக்கு மாறும் விவசாயிகள்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில், ராகி சாகுபடிக்கு இயற்கை உரம் இட விவசாயிகள் தங்கள் நிலங்களில் செம்மறி ஆடுகளை பட்டியிட்டுள்ளனர். கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையில் தேக்கி வைக்கப்படும் நீர் இடது மற்றும் வலது புற கால்வாயில் திறந்துவிடப்படுகிறது. இந்த நீரை கொண்டு அவதானபட்டி, பெரியமுத்தூர்,

திம்மாபுரம், மலையாண்டஅள்ளி, கால்வேஅள்ளி, பையூர், காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்படுகிறது. குறிப்பாக இப்பகுதியில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் பருவமழை பொய்த்து போனதால், கடந்தாண்டு இரண்டாம் போக சாகுபடிக்கு மட்டுமே அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு அறுவடை செய்யப்பட்டது. தற்போது, இந்த நிலங்களில் குறைந்த நாளில் அறுவடை செய்யப்படும் ராகி பயிர் சாகுபடிக்கு விவசாயிகள் தங்கள் நிலங்களை தயார் செய்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் நெல் மற்றும் ராகி சாகுபடிக்கு மாட்டு சாணம், ஆட்டு புழுக்கை, இலைகள் போன்ற இயற்கை உரங்களை விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். காலப்போக்கில் இயற்கை உரம் பயன்பாடு குறைந்து செயற்கை உரங்களை விவசாயிகள் பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து வருகின்றனர்.

அளவுக்கதிகமாக செயற்கை உரங்களை இடுவதால் அரிசி மற்றும் வைக்கோல் பில் நச்சுதன்மை உடையாதாக மாறிவிடுகிறது. இதை தவிர்க்க விவசாயிகள் தற்போது, இயற்கை உர பயன்பாட்டுக்கு மாறி வருகின்றனர்.

தற்போது, ராகி நடவு செய்யவுள்ள வயல்களில் செம்மறி ஆடுகளை விவசாயிகள் பட்டியிட்டு வைக்கின்றனர். ஒரு பட்டியில் குறைந்தது, 100 ஆடுகள் உள்ளன. இரவு நேரங்களில் நிலத்தில் ஆடுகளை பட்டியிடும் போது ஆடுகளின் புழுக்கை நிலத்தில் சேகரிக்கப்படுகிறது. இது ராகி பயிருக்கு சிறந்த உரமாக அமைகிறது.

இதற்காக மலை பகுதிகளில் இருந்து ஆடுகளை ஓட்டி வருபவர்களுக்க நாள் ஒன்றுக்கு ஒரு பட்டிக்கு, 500 ரூபாய்க்கு மேல் விவசாயிகள் கொடுக்கின்றனர். மேலும் ஆடுகளை மேய்ப்பவர்களுக்கு மூன்று வேலை உணவும் விவசாயிகளால் கொடுக்கப்படுகிறது.

பெரியமுத்தூர் மற்றும் அவதானபட்டி பகுதியில் இவ்வாறு விவசாயி நில்களில் ஆடுகளை பட்டி போடுவது தற்போது அதிகரித்துள்ளது. ஆட்டு புழுக்கை சேகரிக்கப்பட்ட வயல்களில் விவசாயிகள் ஏர் உழுது அதற்கு மேல் பச்சை இலைகளை போட்டு ராகி பயிரை நட்டு வைக்கின்றனர். இதனால், எதிர்பார்த்த அளவுக்கு ராகி அறுவடை செய்ய முடியும்.

## மாவட்டத்தில் 78,308 ஏக்கர் வறட்சி பாதிப்பு வங்கிகள் மூலம் ரூ.25.3 கோடி பட்டுவாடா

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், 78,308 ஏக்கரில் வறட்சியின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம், 25.3 கோடி பட்டுவாடா செய்யப்படுகிறது.
தமிழகத்தில், சென்னை தவிர மற்ற, 31 மாவட்டங்கள் வறட்சியால், பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அரசு அறிவித்தது. வறட்சி நிலவரம் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர் தலைமையில், வேளாண் துறை, வருவாய் துறையைச் சேர்ந்த குழு அமைக்கப்பட்டு, ஆய்வு நடத்தப்பட்டது.
தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் வறட்சி குறித்து முதல்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய நிவாரண நிதி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நேரடியாக வங்கி கணக்கின் மூலமாக உரிய நிவாரணம் வழங்கப்படுகிறது.
தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் வறட்சி குறித்த கணக்கெடுப்பு நடத்த கோரிக்கை எழுந்தது. அதையடுத்து, டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் வறட்சி குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, நிவாரணம் வழங்கும் பணியை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில், கோடை காலங்களில் ஈரோடு, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை, சென்னிமலை, நம்பியூர், பவானிசாகர், சத்தி, தாளவாடி ஆகிய யூனியன்கள் அதிகமான வறட்சிக்கு இலக்காகி உள்ளன.
இப்பகுதியில், நெல், கரும்பு, தீவனச்சோளம், ராகி, நிலக்கடலை, எள், ஆமணக்கு, துவரை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, மரவள்ளிக்கிழங்கு ஆகியவை பயிரிடப்படுகிறது. ஆறு தாலுகாவிலும், 78,308 ஏக்கர் விவசாய பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதில், மானாவாரி பயிர்கள், மழைகால பயிர்கள், நீர்பாசனப் பயிர்கள் என தனித்தனியாக கணக்கெடுக்கப்பட்டது. வறட்சியில், 25,769 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அரசிடம் நிவாரண நிதி உதவிப்பெற்று, 25 கோடியே, 27 லட்சத்து, 46 ஆயிரத்தை சம்பந்தப்பட்ட தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. விவசாயிகள் நேரடியாக வங்கிக்கு சென்று, தங்களது கணக்கில் இருந்து பணத்தை பெற்றுக்கொள்கின்றனர். மாவட்டத்தில், ஒன்பது தென்னை மரங்களுக்கு மட்டுமே வறட்சி நிவாரணமாக, 1,480 வழங்கப்பட்டுள்ளது. மேலும், வறட்சியால் விடுப்பட்ட இடங்களை இரண்டாம் கட்டமாக அதிகாரிகள் கணக்கெடுத்து வருகின்றனர்.

## வறட்சியின் பிடியில் காலிங்கராயன் பாசன பகுதி நெல் தவிர்த்து சோளம் பயிரிட்ட விவசாயிகள்

ஈரோடு: மழையின்றி தண்ணீர் வற்றியதாலும், மராமத்து பணிகள் நடைபெற்று வருவதால், காலிங்கராயன் பாசன பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கியதால், நெல்லை தவிர்த்து, சோளம், மக்காச்சோளத்தை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

ஈரோடு காலிங்கராயன் வாய்க்கால் மூலம், 18 ஆயிரம் எக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதியை பெறுகிறது. மறுகரையில் நிலத்தடி நீரில், கிணற்று பாசனம் மூலம் பல ஆயிரம் எக்டேர் பாசன வசதியை பெற்று வருகிறது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட், 15ம் தேதி, காலிங்கராயனில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. நெல், கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். ஆண்டுக்கு இரண்டு போகம் நெல் பயிரிடப்படும்.

கடந்தாண்டு போதிய மழையின்றி, வாய்க்காலில் தண்ணீர் திறந்த போதிலும், நெல், மஞ்சள் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்தனர். மேலும் வாய்க்காலில் சாயம், தோல் கழிவுநீர் கலப்பதை தடுக்க, 50 லட்சம் ரூபாயில், கான்கிரீட் சுவர் மற்றும் தளம் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. மழையின்றி, வாய்க்காலில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டதால், காலிங்கராயன் பாசன பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது. வாக்காலில் ஆங்காங்கே தேங்கியுள்ள சாக்கடை கழிவுநீரை, மோட்டார் மூலம் இறைத்து, வாழை பயிரிட்ட பகுதிக்கு பயன்படுத்துகின்றனர்.

நெல் பயிரிட்ட, 12 ஆயிரம் எக்டேர் நிலங்கள் தரிசாக விடப்பட்டுள்ளது. 5 சதவீதம் நிலத்தில், கால்நடைகளுக்கு தீவனம் வழங்கும் பொருட்டு, சோளம், மக்காச்சோளம் ஆகியவற்றை பயிரிட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயி பரமசிவம் கூறியதாவது,

வாய்காலில் மராமத்து பணிகள் நடப்பதாலும், அணைக்கட்டில் தண்ணீர் குறைந்ததால், நடப்பாண்டு தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை. கடந்த மாதம் பெய்த மழை இரண்டு தெளிப்பு மழை பெய்தது. மஞ்சள், வெள்ளை சோளம் பயிரிட்டுள்ளோம். தவிர, கொள்ளும் பயிரிட்டு உள்ளோம். மழை வந்தால் மீதமுள்ள நிலத்திலும் சோளமே பயிரிடுவோம். தீவன தட்டுப்பாடு உள்ளதால் நல்ல விலை கிடைக்கும், என்றனர்.

## கரூரில் கோரை புல் சாகுபடி... மாவட்ட விவசாயிகள் ஆர்வம்

கரூர்: தொடர்ந்து வறட்சியான நிலை இருப்பதால், கோரை புல் சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளது. குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கோரை பயிரை சாகுபடி செய்ய, கரூர் மாவட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. கரூர் மா வட்ட விவசாயத்தின் ஜீவாதாரமாக விளங்கும் காவிரியாற்றில் தற்போது தண்ணீர் இல்லை. அமராவதி ஆற்றில் சாயக்கழிவு பாதிப்பு மற்றும் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இதனால் நிலத்தடி நீரும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

போதிய தண்ணீர் இல்லாததால், நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பணப்பயிர்களை பயிரிடுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், தற்போது குறைந்த முதலீட்டில் அதிக லாபத்தை நீண்ட காலம் அளிக்கும் கோரை புல் சாகுபடி, கரூர் மாவட்டத்தில் அதிகரித்து

வருகிறது. கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான வாங்கல், என்.புதுார், பிச்சம்பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம், திருமாக்கூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், கோரை பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

ஒருமுறை சாகுபடி செய்து விட்டால் போதும், குறைந்தபட்சம், 30 ஆண்டுகள் வரை, ஆறு மாதத்துக்கு ஒருமுறை கோரை பயிரை அறுவடை செய்யலாம். வேறு பயிரை சாகுபடி செய்ய விரும்பினால், கோரை விதையான கிழங்கை மண்ணில் இருந்து எடுத்து விட வேண்டும். அதிகளவில் தண்ணீர், உரம் மற்றும் பராமரிப்பு செலவில்லாத கோரை பயிர், கரூர் அமராவதி மற்றும் காவிரியாற்று பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கோரை பயிர்கள் மூலம் பொதுமக்கள் உறங்க பயன்படுத்தும் பாய்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கரூர் மாவட்டம், நெரூரைச் சேர்ந்த கோரை பயிர் விவசாயிகள் கூறியதாவது:

போதிய தண்ணீர் இல்லாதால், கோரை பயிர்கள் சாகுபடி அதிகளவில் துவங்கியுள்ளது, கோரை பயிர்களை கொண்டு, கான்கீரிட் அமைக்கவும், திரைச்சீலை, நாற்காலிகள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. கோரை பயிரை கொண்டு கைமூலம் பாய் தயாரிக்கும் தொழில்நுட்பம் மறைந்து, தற்போது அதிகளவில், மின்சாரம் மூலம்தான் பாய்கள் தயாரிக்கப்படுகிறது. மின்வெட்டு உள்ள காலங்களில் கான்கிரீட் அமைக்க கோரை விற்பனை செய்யப்படுகிறது. கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை, கட்டிட பணிகள் அதிகளவில் நடந்து வருவதால், கோரை பயிர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள டிமாண்டால், கோரை பயிரிட ஆர்வமாக உள்ளோம்.

இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## வறட்சி நிவாரணம் வழங்கலில் முறைகேடு புதுகை மாவட்ட விவசாயிகள் குற்றச்சாட்டு

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரண நிதி வழங்குவதில் முறைகேடு நடப்பதாக விவசாயிகள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரண நிதி வழங்கப்பட்டது.

இதையடுத்து டெல்டா அல்லாத பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண நிதி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

இதையடுத்து அமைச்சர்கள் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் மாவட்டங்கள்தோறும் சென்று வறட்சி பகுதிகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தனர்.

இதனடிப்படையில் வறட்சியினால் 50 சதவீதத்துக்கு மேல் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் நிவாரண நிதி வழங்க அரசு உத்தரவிட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சத்து, 57 ஆயிரத்து, 446 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்குவதற்காக தமிழக அரசு சார்பில் 60 கோடியே, 39 லட்சத்து, 76 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இவை தொடர்புடைய தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் முறைகேடு நடப்பதாக விவசாயிகள் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குளத்தூர் தாலுகா வெள்ளனூர், பூங்குடி, மேலூர் பஞ்சாயத்து பகுதிகளில் கிட்டத்தட்ட 2,200 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் வறட்சியினால் கருகி சேதமடைந்தது. இதன்காரணமாக அப்பகுதிகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் பலத்த பொருளாதார இழப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களுக்கு வெள்ளனூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் வறட்சி நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக அந்த வங்கிக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 15 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

இதை வைத்து பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண நிதி வழங்க முடியாத நிலை வெள்ளனூர் தொடக்க வேளாண் வங்கி நிர்வாகம் தத்தளித்து வருகிறது. நிலமையை சமாளிப்பதற்காக ஓர் ஏக்கர் மற்றும் அதற்கு குறைவாக உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வறட்சி நிவாரண நிதி வழங்கிவருகிறது.

இதனால் இரண்டு ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்துவரும் விவசாயிகள் அரசு நிர்ணயித்துள்ள நிவாரண நிதி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஒரே குடும்பத்தில் ஓர் ஏக்கருக்கும் குறைவாக விவசாயம் செய்துவரும் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் தலா ஐந்தாயிரம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இரண்டு ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்துவரும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தலா இரண்டாயிரம் முதல் நான்காயிரம் ரூபாய் வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பூங்குடியைச் சேர்ந்த விவசாயி முத்து கூறியதாவது:

எனது அப்பா குமாரசாமி, அம்மா சிவகாமசுந்தரி ஆகியோர் பெயிரில் உள்ள நான்கரை ஏக்கர் விவசாய நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் வறட்சியினால் போதிய தண்ணீர் இன்றி மகசூல் பாதிக்கப்பட்டது. எங்களுக்கு வறட்சி நிவாரண நிதியாக நான்காயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஓர் ஏக்கருக்கும் குறைவாக விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்கு எட்டு ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசியல் தலையீடு தான் காரணம் என ஆதங்கப்பட்டார்.

## குறைந்த நீரில் பருத்தி சாகுபடி: செம்பூண்டி விவசாயிகள் ஆர்வம்

மதுராந்தகம்: குறைந்த நீரில், அதிக மகசூல் தரும் பருத்தி பயிர் சாகுபடி செய்வதில், செம்பூண்டி கிராம மக்கள், ஆர்வம் காட்டி வருகின்றனர். மதுராந்தகம் - எல்.எண்டத்தூர் சாலையில், செம்பூண்டி கிராமம் உள்ளது. இக்கிராமத்தில், கோடை கால பயிராக, குறைந்த நீரில் அதிக மகசூல் தரும் பருத்தி பயிர் சாகுடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து, அப்பகுதி விவசாயி ராமச்சந்திரன் கூறியதாவது: பருத்தி, எட்டு மாத பயிராகும். இச்சாகுபடியில், மூன்றாவது மாதத்தில் முதல் அறுவடையும், அடுத்த ஐந்தாவது மாதத்தில், இரண்டாவது அறுவடையும் செய்ய முடியும். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதும். பருத்தி பயிரிட, ஒரு ஏக்கருக்கு, 5,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது.அறுவடை செய்யப்படும் பருத்தியை, விழுப்புரத்தில் உள்ள விற்பனை மையத்தில் விற்பனை செய்கிறோம். ஒரு குவிண்டால், 4,500 ரூபாய் வரை விற்பனை செய்ய முடிகிறது. ஒரு ஏக்கருக்கு, 6 குவிண்டால் வரை மகசுல் கிடைக்கிறது. இதன் மூலம், 20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

## நாற்று நடும் இயந்திரம் மூலம் லாபம் கிடைப்பதால் விவசாயிகள் ஆர்வம்

கீழக்குடி: விவசாய கூலி வேலைக்கு ஆட்கள் கிடைக்காத காரணத்தினால், நாற்று நடும் பணிக்கு இயந்திரங்களை விவசாயிகள் நாடிச் செல்கின்றனர். இதனால், அவர்களுக்கு கணிசமான லாபம் கிடைக்கிறது. பள்ளிப்பட்டு பகுதியில், கீழக்குடி, புண்ணியம், பாண்டரவேடு, கேவராஜகுப்பம், பெருமாநல்லூர் ஆகிய பகுதிகள், கொற்றலை ஆற்றங்கரையோரம் அடங்கியுள்ளதால், விவசாயத்திற்கு போதிய தண்ணீர் வசதி உள்ளது. பெரும்பாலான விவசாயிகள், தமிழக அரசு வழங்கும், இலவச மின் வசதியின் மூலம், கட்டணம் ஏதுமின்றி மின் மோட்டார்கள் மூலம் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இந்த பகுதியில் கரும்பு, நெல் போன்ற பயிர்கள் பயிரிடப்படுகிறது. நெற்பயிர் விவசாயம் செய்வதற்கு ஏர் உழுதல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு காரணம் விவசாய கூலி ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆட்கள் இருந்தும் அவர்கள் கேட்கும் கூலித் தொகையை வழங்க முடியாத காரணத்தினால், விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்துகின்றனர். மேலும், நூறு நாள் திட்டத்தின் கீழ் வேலைக்கு செல்கின்றனர். இதனால், நெற்பயிர் பயிரிடுவது குறைந்து வருகிறது. சிலர் கரும்பு பயிரை பயிரிடுகின்றனர். இந்த இயந்திரங்கள் மூலம் நாற்று நடுதல், ஏர் உழுதல், அறுவடை செய்தல் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களுக்கு கணிசமான லாபம் கிடைப்பதாக கூறுகின்றனர். இதுகுறித்து, கீழக்குடி பகுதியைச் சேர்ந்த விவசாயி சீனிவாசன் கூறியதாவது: ஏர் உழுவதற்கு டிராக்டரை பயன்படுத்தி வருகிறோம்.

அறுவடை இயந்திரமும், பல ஆண்டுகளாக பயன்படுத்துகிறோம். ஆனால், தற்போது நாற்று நடுவதற்கும் இயந்திரம் வந்துள்ளது. அதன்மூலம் நாற்று நடு விடுதல், அதை பிடுங்கி நடுதல் பணியும் கிடையாது. இதற்கென, விவசாய நாற்று பண்ணைகள் அமைத்துள்ளவர்களிடம் சென்று ஏக்கருக்கு, 450 ரூபாய் கூலியாக பணம் செலுத்தினால் போதும். அவர்கள் தரமான நெல் நாற்று கட்டுகளை எடுத்து வந்து, வயலில் அதற்காக உள்ள நவீன இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்துடன் நட்டு விட்டு செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

### உழவர் பெருவிழாவில் பண்ணை இயந்திரங்கள் பயன்பாடு குறித்து விளக்கம்

பள்ளிப்பட்டு: பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், ஒரு மாத காலமாக நடந்த உழவர் பெருவிழா நிறைவடைந்தது. பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், ஏப்., 14ம் தேதி முதல், மே, 20ம் தேதி வரை வேளாண்மைத்துறையின் சார்பில், உழவர் பெருவிழா நடந்தது. இந்த விழா ஒன்றியத்திலுள்ள, 33 ஊராட்சிகள் மற்றும் பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு பேரூராட்சிகளில் நடந்தது. விழாவில், முக்கிய நிகழ்ச்சியாக இரண்டு பேரூராட்சிகளிலும், பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடந்தது. இந்த விழாவில் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த துணை வேளாண்மை இயக்குனர் பாபு, பள்ளிப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனர் முபாரக் பாஷா, வேளாண் பொறியியல் துறையைச் சேர்ந்த இளநிலை பொறியாளர் கலைச் செல்வன், விதை சான்று அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு, வேளாண்மை துறை குறித்து விளக்கம் அளித்தனர். இந்த பெருவிழாவில், பாரம்பரிய பயிர்கள் பயன்படுத்துவது குறித்து, பிரசார வாகனம் மூலம், விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், பண்ணை இயந்திரங்கள் பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. சூரிய சக்தி மூலம் மின் மோட்டார்களை இயக்குவதற்கும், நீர் சேமிப்பு கருவிகள் பயன்படுத்துவதற்கும், பொறியியல் துறையினர் விளக்கம் அளித்து, அதற்கான அரசு மானியம் குறித்து, விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். திருந்திய நெல் சாகுபடி மூலம், அதிக மகசூல் பெறுவது குறித்தும், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், நவீன வேளாண் இயந்திரங்களை பயன்படுத்த, மானியம் அளிக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. விதை நேர்த்தி செய்வதன் மூலம், பயிருக்கு பரவும் நோயை கட்டுப்படுத்துதல், இலை வண்ண அட்டை மூலம் அதற்கு தகுந்தபடி உரம் போடுதல், இலைப்புள்ளி நோய், குலை நோய் குறித்தும் விதை சான்று அலுவலர்கள் விளக்கம் கூறினார். உழவர் பெருவிழாவின், முக்கிய அம்சமாக கலை நிகழ்ச்சி நடத்தி, அதன் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## கேழ்வரகு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் :திண்டிவனத்தில் விளைச்சல் அமோகம்

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் கேழ்வரகு பயிர் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.திண்டிவனம் அடுத்த முருக்கேரி, சிறுவாடி, நல்லம்பாக்கம், நகர், வடநெற்குணம் உள்பட

25க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் தர்பூசணி அதிகளவில் பயிரிடப்பட்டது.மழையால் பாதிப்புதர்பூசணி அறுவடை செய்யும் நேரத்தில் மழை குறுக்கிட்டதால் விவசாயிகள் அதிகளவில் பாதித்தனர். இதனை தொடர்ந்து, அப்பகுதி விவசாயிகள் சிறு தானியப்பயிரான கம்பு, கேழ்வரகு, எள், தினை போன்றவை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.கோடைகாலம் துவங்கியதால் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் ஏற்படும் சூட்டை தனிக்க வசதியானவர்கள் இளநீர், வெள்ளரி பிஞ்சு, ஜூஸ் சாப்பிடுகின்றனர்.கூழ் மீது ஆர்வம்கிராமத்தில் உள்ளவர்கள் விவசாய நிலத்தில் கிடைக்கும் பாரம்பரியம் மிக்க கேழ்வரகு கூழையே சாப்பிடுவர். தற்போது வசதி படைத்தவர்களும் கேழ்வரகு கூழ் கிடைக்குமிடத்தை நோக்கிச் செல்கின்றனர். கூழ் ஓட்டல்களில் கிடைப்பதில்லை.

சென்னையில் இருந்து திண்டிவனம் வழியாக புதுச்சேரி செல்லும் பைபாஸ் சாலை ஓரங்களில் சிறு, கீற்று கொட்டகை அமைத்து கூழ் விற்பனை செய்கின்றனர். கார்களில் பயணம் செய்பவர்கள் கூழை விரும்பிச் சாப்பிடுகின்றனர்.நல்ல விலை இதனால் கேழ்வரகுக்கு மார்க்கட்டில் நல்ல விலை கிடைக்கிறது. மேலும், கோடைக் காலங்களில் கம்பு, கேழ்வரகு, எள், தினை போன்ற சிறு தானியப் பயிர்களை பயிர் செய்தால் உரம், பூச்சிகொல்லி மருந்து, தண்ணீர் அதிக தேவையில்லை. இதனால் குறைந்த செலவு ஆகிறது.கோடைக் காலங்களில் கிணற்று பாசனத்தில் கிடைக்கும் குறைந்த நீரால் வேறு எந்த பயிர்களும் செய்ய முடியாத நிலையில் விவசாயிகளுக்கு சிறு தானிய பயிர் செய்வது லாபகரமாக உள்ளது.மேலும், விளைந்த சிறு தானிய பயிர்களுக்கு மார்க்கெட்டில் நல்ல கிராக்கி உள்ளதால் வியாபாரிகள் விவசாயிகளின் வீட்டிற்கே வந்து வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவும் இல்லாமல் போகிறது. இது போன்ற பல காரணங்களால் இப்பகுதி விவசாயிகள் சிறு தானிய பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## 10 மடங்கு! வறட்சியால் வாழை இலை விலை அதிகரிப்பு சேலத்தில் ஒரு இலை 7 ரூபாய்க்கு விற்பனை

சேலம்: கடும் வறட்சி காரணமாக, வாழை இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது.

திருமண நிகழ்ச்சி, கோவில் விழா மற்றும் அன்னதானம் செய்யும் இடங்களில் அதிகம் பயன்படுவது வாழை இலைகளே. அனைத்து டீ கடைகளிலும், ஹோட்டல்களிலும் டிபன் மற்றும் சாப்பாட்டுக்கு வாழை இலைகளையே பயன்படுத்தப்படுகின்றனர். வரத்து குறைவு காரணமாக, வாழை இலைகள் மிகவும் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

சேலம் வ.உ.சி., மார்க்கெட் வியாபாரி பானுசங்கர் கூறியதாவது:

வத்தலகுண்டு, தூத்துக்குடி பகுதியிலிருந்து தினமும் வாழை இலைகள் சேலத்துக்கு வருகிறது. தினமும், 1,000 வாழை இலை கட்டுகள் வந்தன. கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால், 300 வாழை இலை கட்டுகளே தற்போது மார்க்கெட்டுக்கு வருகின்றன. இதனால், இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. 35 ஆண்டுகளாக வாழை இலை தொழில் செய்து வரும் நான், வாழை இலை பத்து மடங்கு விலை உயர்ந்ததை இன்று தான் பார்க்கிறேன்.

ஐந்து அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 2,500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 5,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்த மாதம், எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 500 ரூபாய்க்கு மட்டுமே விற்பனையானது. மே, 13ம் தேதி, 3,500 ரூபாய்க்கு வாழை இலை விற்கப்பட்டது. இதை தொடர்ந்து கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால் வாழை இலைகளின் வரத்து அடியோடு குறைந்து விட்டது.

சேலம் வ.உ.சி., மார்க்கெட் பகுதியில், 70 வாழை இலை கடைகள் உள்ளன. தூத்துக்குடி, வத்தலகுண்டு பகுதியில் இருந்து வரும் வாழை இலைகள் அகலம் கொண்டுள்ளதால், ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு இலை, 2 ரூபாய்க்கு ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்து வருகிறோம். அவர்களிடம், ஒரு இலைக்கு, ஏழு ரூபாய் கேட்டால் தரமாட்டார்கள். எனவே, நாங்கள் நஷ்டத்தில் தான் அவர்களிடம் இலையை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சில்லரையில் இங்கு வந்து வாங்குவோருக்கு, ஒரு டிபன் இலை, மூன்று ரூபாய்க்கும், சாப்பாடு இலை, ஏழு ரூபாய்க்கும் விற்கிறோம்.

தற்போது, முகூர்த்த நாள் அதிகரித்துள்ளதும், கோவில் விழாக்கள் அதிகரித்துள்ளதாலும், வாழை இலை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், வரத்து குறைவால், வாழை இலைகள் கிடைப்பது அரிதாக உள்ளது. மழை பெய்தால் மட்டுமே வாழை இலைகளின் விலையை கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியால் காய்கறி விலை கிடுகிடு உயர்வு உற்பத்தி குறைந்ததால் விவசாயிகள் சோகம்

மேட்டூர்: கடும் வறட்சியால் தற்போது காய்கறி கொள்முதல் மற்றும் விற்பனை அதிகரித்துள்ளது. சேலம் மாவட்டத்தில், 20 ஆண்டுக்கு பின் நடப்பாண்டு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சியால் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணை உள்பட பல்வேறு அணைகள் வறண்டு கிடக்கிறது. அணையில் இருந்து பாசனத்துக்கு நீர்திறக்காததால், ஏரி, குளம், கால்வாய்களும் வறண்டு விட்டது.

நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்து விட்டது. சேலம் மாவட்டத்தின் பல இடங்களில், 1,000 அடிக்கு ஆழத்துக்கும் மேல் போர்வெல் போட்டும் தண்ணீர் இல்லாததால் வழக்கமாக காய்கறி சாகுபடி செய்யும் மேட்டுக்காடு விவசாயிகளும் நிலத்தை தரிசாக போட்டுள்ளனர்.

ஆங்காங்கே அரிதாக நிலத்தடி நீரை பயன்படுத்தி விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்துள்ளனர். அந்த காய்கறிகள் மட்டுமே தற்போது சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. காய்கறி வரத்து மூன்றில் ஒரு பங்கு குறைந்து விட்டதால், அதற்கேற்ப விலை அதிகரித்துள்ளது.

மேட்டூர் உழவர் சந்தையில் கடந்த மாதம் ரூபாய், 30க்கு விற்ற ஒரு கிலோ சின்ன வெங்காயம் நேற்று கிலோ ரூபாய், 55 முதல், 60க்கு விற்பனையானது. ஒரு கிலோ தக்காளி ரூபாய், 45, கத்தரி ரூபாய், 28, பீன்ஸ் ரூபாய், 80, கேரட் ரூபாய், 46க்கு விற்பனை செய்யப்பட்டது.

மேட்டூர் காவிரி கரையோரம் கோல்நாயக்கன்பட்டி, ரெட்டியூர், தெற்கத்திக்காடு, பூலாம்பட்டி பகுதி விவசாயிகள் அதிக அளவில் வெண்டை சாகுபடி செய்தனர். தற்போது வெண்டை அறுவடை சீஸன் துவங்கியுள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் ஒரு கிலோ வெண்டையை மூன்று ரூபாய்க்கு கொள்முதல் செய்த வியாபாரிகள் நடப்பாண்டு ஒரு கிலோ ரூபாய்,11க்கு கொள்முதல் செய்கின்றனர்.

வறட்சியால் நடப்பாண்டு வெண்டை விலை மூன்றரை மடங்கு அதிகரித்துள்ளது வெண்டை விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. காய்கறிகள் விலை அதிகரித்துள்ளது பொதுமக்களையும், தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகளையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

## 2,700 பருத்தி மூட்டைகள் ரூ.45 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 45 லட்சம் ரூபாய்க்கு, பருத்தி விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டையில் உள்ள, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை

சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள், எண்ணெய் வித்து மற்றும் தானியங்கள் ஏலம் நடந்து வருகிறது.

நேற்று முன்திம் நடந்த பருத்தி ஏலத்தில், ஆத்தூர், தலைவாசல், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர், திட்டக்குடி பகுதியை சேர்ந்த, 220 விவசாயிகள், 2,700 மூட்டை பருத்தியை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஆத்தூர், கோவை, திருப்பூர், திருச்சி பகுதியை சேர்ந்த, 17 வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்திக்கு விலை நிர்ணயம் செய்தனர். அதன்படி, பி.டி., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சம், 4,966 ரூபாய், குறைந்தபட்சம், 4,484 ரூபாய், டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 5,266 ரூபாய், குறைந்தபட்சம், 4,846 ரூபாய் என, விற்பனையானது.

மொத்தம், 2,700 பருத்தி மூட்டைகள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## தர்மபுரியில் கோடை மழையால் மரவள்ளி சாகுபடி பணி சுறுசுறுப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்த கோடை மழையை தொடர்ந்து, விவசாயிகள், மரவள்ளி கிழங்கு நடவு செய்யும் பணிகளை துவங்கியுள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் ஒன்று மரவள்ளி கிழங்காகும். மரவள்ளி கிழங்கு அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு உட்பட மாவட்டம் முழுவதும் கடந்தாண்டு மானாவரி, இறவை சாகுபடியில் விவசாயிகள், 18 ஆயிரத்து, 978 ஹெக்டர் சாகுபடி செய்திருந்தனர்.

கடந்தாண்டு, தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், உற்பத்தி பாதிக்கப்பட்டதால், மரவள்ளி கிழங்கின் தேவை அதிகரித்து. ஒரு டன் மரவள்ளி கிழங்கு, ஐயாயிரம் ரூபாய் வரை விற்பனை ஆனாது.

கடந்த சில ஆண்டுகளாக, இரண்டாயிரம் ரூபாய்க்கும் குறைவாக விற்பனை செய்யப்பட்ட, ஒரு டன் மரவள்ளிகிழங்கு கடந்தாண்டு, ஐயாயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனதை தொடர்ந்து, மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளி கிழக்கு நடவு செய்ய ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் பெய்து வரும் கோடை மழையை தொடர்ந்து விவசாயிகள் தங்களது நிலத்தில் மரவள்ளி கிழங்கு குச்சிகள் மற்றும் நாற்றுகளை நடவு செய்யும் பணியில் ஈடுபட துவங்கியுள்ளனர்.

எதிர்பார்த்த படி பருவ மழை கைகொடுக்கும் பட்சத்தில் மாவட்டத்தில் கடந்தாண்டை விட,

இந்தாண்டு மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும், என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## 10 மடங்கு! வறட்சியால் வாழை இலை விலை அதிகரிப்பு சேலத்தில் ஒரு இலை 7 ரூபாய்க்கு விற்பனை

சேலம்: கடும் வறட்சி காரணமாக, வாழை இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது.

திருமண நிகழ்ச்சி, கோவில் விழா மற்றும் அன்னதானம் செய்யும் இடங்களில் அதிகம் பயன்படுவது வாழை இலைகளே. அனைத்து டீ கடைகளிலும், ஹோட்டல்களிலும் டிபன் மற்றும் சாப்பாட்டுக்கு வாழை இலைகளையே பயன்படுத்தப்படுகின்றனர். வரத்து குறைவு காரணமாக, வாழை இலைகள் மிகவும் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

சேலம் வ.உ.சி., மார்க்கெட் வியாபாரி பானுசங்கர் கூறியதாவது:

வத்தலகுண்டு, தூத்துக்குடி பகுதியிலிருந்து தினமும் வாழை இலைகள் சேலத்துக்கு வருகிறது. தினமும், 1,000 வாழை இலை கட்டுகள் வந்தன. கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால், 300 வாழை இலை கட்டுகளே தற்போது மார்க்கெட்டுக்கு வருகின்றன. இதனால், இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. 35 ஆண்டுகளாக வாழை இலை தொழில் செய்து வரும் நான், வாழை இலை பத்து மடங்கு விலை உயர்ந்ததை இன்று தான் பார்க்கிறேன்.

ஐந்து அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 2,500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 5,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்த மாதம், எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 500 ரூபாய்க்கு மட்டுமே விற்பனையானது. மே, 13ம் தேதி, 3,500 ரூபாய்க்கு வாழை இலை விற்கப்பட்டது. இதை தொடர்ந்து கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால் வாழை இலைகளின் வரத்து அடியோடு குறைந்து விட்டது.

சேலம் வ.உ.சி., மார்க்கெட் பகுதியில், 70 வாழை இலை கடைகள் உள்ளன. தூத்துக்குடி, வத்தலகுண்டு பகுதியில் இருந்து வரும் வாழை இலைகள் அகலம் கொண்டுள்ளதால், ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு இலை, 2 ரூபாய்க்கு ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்து வருகிறோம். அவர்களிடம், ஒரு இலைக்கு, ஏழு ரூபாய் கேட்டால் தரமாட்டார்கள். எனவே, நாங்கள் நஷ்டத்தில் தான் அவர்களிடம் இலையை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சில்லரையில் இங்கு வந்து வாங்குவோருக்கு, ஒரு டிபன் இலை, மூன்று ரூபாய்க்கும், சாப்பாடு இலை, ஏழு ரூபாய்க்கும் விற்கிறோம்.

தற்போது, முகூர்த்த நாள் அதிகரித்துள்ளதும், கோவில் விழாக்கள் அதிகரித்துள்ளதாலும், வாழை

இலை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், வரத்து குறைவால், வாழை இலைகள் கிடைப்பது அரிதாக உள்ளது. மழை பெய்தால் மட்டுமே வாழை இலைகளின் விலையை கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பழநியில் "மா' விளைச்சல் அதிகரிப்புவிலை குறைவு; விவசாயிகள் கவலை

பழநி:பழநி வட்டாரத்தில் மா தோப்புகளில் மாங்காய் காய்ப்பு அதிகரித்துள்ளதால், சந்தையில் விலை குறைந்துள்ளது. எதிர்பார்த்த விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பழநி சுற்றுவட்டாரத்தில், பாலசமுத்திரம், சட்டப்பாறை, ஆயக்குடி, தொப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி, தேக்கந்தோட்டம் ஆகிய இடங்களில் மாந்தோப்புகள் உள்ளது. இந்தாண்டு மா மரங்களில் காய்காய்ப்பு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஆயக்குடி சந்தையில் கடந்த மாதம், கிலோ 30 முதல் 45 வரை விற்கப்பட்ட கல்லா மாங்கய் தற்போது கிலோ 8 முதல் 10 வரை விற்கப்படுகிறது. மல்கோவா, பங்கனபள்ளி, காவரை மாம்பழங்களின் விலையும் கிலோ ரூ.40ல் இருந்து ரூ.18 முதல் 20 ரூபாயாக குறைந்துள்ளது.விவசாயி சிவசுப்ரமணி கூறுகையில்,"" கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாங்காய் காய்ப்பு அதிகரிப்பு காரணமாக, சந்தையில் மாங்காய், மாம்பழம் விலை குறைந்துள்ளது. மல்கோவா மாம்பழம் கிலோ 30 ரூபாயும், செந்தூர் மாம்பழம் 25 ரூபாயும், இமாம்பசந்த் கிலோ 35 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கல்லா மாங்காய் கிலோ 8 முதல் 10 வரை விற்கிறோம். எதிர்பார்த்த அளவிற்கு விலை கிடைக்கவில்லை," என்றார்.

### வாழை இலை விலை கிடு கிடுஒரு இலை ரூ.7க்கு விற்பனை

கடும் வறட்சியால், வாழை இலை விலை, கிடு கிடுவென, உயர்ந்துள்ளது.விருந்து நிகழ்வுகளில், அதிகம் பயன்படுவது வாழை இலைகள்தான். வாழை இலை வரத்து குறைந்துள்ளதும், அதன் விலை உயர்விற்கு காரணம்.

**வறட்சி:**இதுகுறித்து,சேலம், வ.உ.சி., சந்தை வியாபாரி, பானுசங்கர் கூறியதாவது:

வத்தலக்குண்டு, தூத்துக்குடி பகுதியிலிருந்து தினமும் வாழை இலைகள் சேலத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. தினமும், 1,000 வாழை இலை கட்டுகள் வந்தன.கடும் வறட்சியால், 300 வாழை இலை கட்டுகளே, தற்போது சந்தைக்கு வருகின்றன. இதனால், இலைகளின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த, 35 ஆண்டுகளில், வாழை இலை விலை, பத்து மடங்கு உயர்ந்துள்ளது.ஐந்து அடி நீளம் உள்ள, 200 வாழை இலை விலை, 2,500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. எட்டு அடி நீளம் உள்ள,

200 வாழை இலை, 5,000 ரூபாய்க்கு விற்பனைசெய்யப்படுகிறது.கடந்த மாதம், எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 500 ரூபாய்க்கு விற்பனையானது. இது, மே, 13ம் தேதி, 3,500 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

சேலம் வ.உ.சி., சந்தையில், 70 வாழை இலை கடைகள் உள்ளன. தூத்துக்குடி, வத்தலக்குண்டு பகுதியில் இருந்து வரும், வாழை இலைகள் அகலமாக உள்ளதால், ஓட்டல்களுக்கு ஒரு இலை, 2 ரூபாய் வீதம் வினியோகம் செய்யப்படுகிறது.

**முகூர்த்த நாள்:**சில்லரையில் வாங்குவோருக்கு, ஒரு டிபன் இலை, மூன்று ரூபாய்க்கும், சாப்பாடு இலை, ஏழு ரூபாய்க்கும் விற்கிறோம்.முகூர்த்த நாள், கோவில் விழாக்கள் அதிகரித்துள்ளதால், வாழை இலை விலை உயர்ந்துள்ளது. வரத்து குறைவால், வாழை இலைகள் கிடைப்பது அரிதாக உள்ளது. மழை பெய்தால் மட்டுமே, வாழை இலை விலை கட்டுக்குள் வரும். இவ்வாறு, அவர் கூறினார்.

- நமதுநிருபர் –

## ரப்பர் இறக்குமதி வரியைமீண்டும் உயர்த்த கோரிக்கை

புதுடில்லி:ரப்பர் இறக்குமதி மீதான வரியை, மீண்டும் உயர்த்த வேண்டும் என, மத்திய வர்த்தக அமைச்சகம், நிதி அமைச்சத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான், வர்த்தக அமைச்சகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, வருவாய் துறை, ரப்பர் மீதான இறக்குமதி வரியை, கிலோவுக்கு, 20 ரூபாயிலிருந்து, 34 ரூபாயாக அதிகரித்தது.இந்நிலையில், உள்நாட்டில் ரப்பர் விலை சரிவடைந்து, விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வகையில், இதன் மீதான இறக்குமதி வரியை மீண்டும் உயர்த்த வேண்டும் என, கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில், தற்போது, ஒரு கிலோ ரப்பர் விலை, 160 ரூபாயாக சரிவடைந்துள்ளது. இது, கடந்தாண்டில், 230 ரூபாயாக அதிகரித்து காணப்பட்டது. அண்டை நாடுகளில் இருந்து, குறைந்த விலையில், அதிகளவில் ரப்பர் இறக்குமதி செய்து கொள்வதே, இதற்கு முக்கிய காரணம். எனவே, உள்நாட்டில், ரப்பர் விலை மேலும் சரிவடைவதை தடுக்கும் வகையிலும், இத்தொழில் ஈடுபட்டு வரும், விவசாயிகளை பாதுக்காக்கும் நோக்கிலும், ரப்பர் இறக்குமதி மீதான வரியை உயர்த்த வேண்டும் என, வர்த்தக அமைச்சகம், மீண்டும் நிதி அமைச்சகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தேயிலை தோட்ட தொழிலாளர் சம்பள பேச்சுவார்த்தையில் இழுபறி

கோவை:கோவையில் நடந்த, வால்பாறை தேயிலை தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை, எந்த முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

**தினக்கூலி:**கோவை மாவட்டம், வால்பாறையில் எட்டு நிறுவனங்களின் தேயிலை எஸ்டேட்களில், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். தொழிலாளர்களுக்கு, தினக்கூலியாக, 162 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த ஏப்., 24 முதல், தினக்கூலியாக, 185.40 ரூபாய் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. தொழிலாளர்களின் சம்பளத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, அகவிலைப்படியை உயர்த்த வேண்டும். இதன்படி, வரும் ஜூலை 1ம் தேதி, அகவிலைப்படி உயர்த்தப்பட வேண்டும்.

மேலும், சம்பள ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, ஜூன் 14ம் தேதியுடன் ஐந்தாண்டுகள் நிறைவடைவதால், புதிதாக சம்பளம் நிர்ணயிக்க வேண்டும். கோவை ஏ.டி.டி., காலனியில் உள்ள தமிழ்நாடு தேயிலை தோட்ட அதிபர்கள் சங்கத்தில், இதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது.இதில், வால்பாறை எம்.எல்.ஏ., ஆறுமுகம், தமிழ்நாடு தேயிலை தோட்ட அதிபர்கள் சங்க பொறுப் பாளர்கள், எட்டு நிறுவனங்களின் மேலாளர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**அகவிலைபடி:**தொழிற்சங்க நிர்வாகிகள் தரப்பில் கூறுகையில்,"தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு, தினக்கூலியாக, 200 ரூபாய் வழங்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உயர்த்தப்படும் அகவிலைப்படியை, சம்பளத்துடன் சேர்த்து, பணப்பலன் வழங்க வேண்டும்.தொழிலாளர்களின் சம்பளம் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை நிர்ணயிக்கப்பட்டு வந்தது. கடந்த 2008 முதல், ஐந்தாண்டுக்கு ஒருமுறை சம்பளம் நிர்ணயிக்கவும், அகவிலைப்படியை சம்பள விகிதத்தில் சேர்க்காமல் பிரித்து வழங்கவும் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை மாற்றி அமைக்க வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டது.

தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தரப்பில்,"அகவிலைப்படிக்கு பணப்பலன் வழங்க முடியாது. தற்போது, 185.50 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. புதிதாக குறைந்தபட்ச சம்பளம், 194 ரூபாயாக நிர்ணயிக்க முடியும். 2002ம் ஆண்டு நிலுவை சம்பளத்தில், 500 ரூபாய் மட்டுமே வழங்க முடியும்' என, தெரிவிக்கப்பட்டது.தொழிற்சங்க நிர்வாகிகள் பேசுகையில்,தினக்கூலியாக,198 ரூபாய்க்கு குறைவாக நிர்ணயிக்க அனுமதிக்க மாட்டோம் அகவிலைப்படியை சம்பளத்துடன் சேர்த்து, கணக்கிட்டு பணப்படி வழங்க வேண்டும். நிலுவை சம்பளம்1,200 ரூபாய்க்கு கீழ் குறைக்க முடியாது' என, வலியுறுத்தப்பட்டது. இரு தரப்பு பேச்சில், இறுதி முடிவு ஏற்படாததால், மறு தேதி குறிப்பிடாமல் பேச்சு வார்த்தை ஒத்தி வைக்கப்பட்டது.

**அரசுக்கு எதிர்ப்பு:**வால்பாறை தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு 2008ல், குறைந்த பட்ச தினக்கூலியாக, 104 ரூபாய் அறிவிக்கப்பட்டது. ஆண்டுக்கு நான்கு முறை அகவிலைப்படி உயர்த்தும் போது, ஐந்தாண்டு நிறைவில், 2013ல் , 224 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும். ஆனால், தற்போது, 162 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது.

அரசின் அறிவிப்பில், 185.40 ரூபாய் மட்டுமே வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசின் செயல்பாடுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், முறையாக வழங்க வேண்டிய, 224 ரூபாயை பெற்றுத்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.05.2013 A.M**

---

## வறட்சி நிவாரணம் பெறும் விவசாயிகள் பட்டியலை விஏஓ அலுவலகத்தில் வைக்க வேண்டும்

திருப்பூர், : திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையிலும், மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி முன்னிலையிலும் நடந்தது.

கூட்டம் துவங்கியதும், பேசிய விவசாயிகள், திருப்பூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை முழு அளவில் நிவாரணத் தொகை வந்து சேரவில்லை. நிவாரண நிதி எப்படி வழங்கப்படுகிறது, நிவாரணம் பெறும் விவசாயிகள் பட்டியல் ஆகியவற்றை, மாவட்ட நிர்வாகம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நிவாரண நிதி வழங்குவது சம்பந்தமாக, கிராம நிர்வாக அதிகாரிகளிடம் எப்போது விளக்கம் கேட்டாலும், ஜமாபந்தியை காரணம் கூறி பதில் அளிப்பதில்லை.

யாருக்காக ஜமாபந்தி நடத்துகிறீர்கள், விவசாயிகள் இறந்த பிறகு நிவாரண ம் கிடைத்து என்ன பயன். 2 ஏக்கர் வைத்துள்ள ஒரு விவசாயிக்கு, 30 சென்ட் அளவுக்கு தான் நிவாரணம் கிடைத்துள்ளது. 50 சதவீதம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், முழு¬ மயாக நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிவாரணத் தொகை ஒதுக்கப்பட்டதில், உடுமலை தாலுகாவுக்கு அதிகமாகவும், தாராபுரம் தாலுகாவுக்கு குறைவாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. நிவாரணம் உண்மையிலே« ய பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தான் ஒது க் கப்பட்டுள் ளதா? என்பதை அனைத்து விவசாயிகளும் அறிந்துகொள்ளும் வகையில், அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் பயனாளிகளின் பட்டியலை வைக்க வேண்டும் என்றனர்.

இதற்கு பதிலளித்து பேசிய கலெக்டர் கோவிந்தராஜ், விவசாயிகள் மீது எப்போதுமே மாவட்ட நிர்வாகம் பரிவோடு தான் நடந்துள்ளது. நமது மாவட்டத்திற்கு அருகில் உள்ள மாவட்டங்களான கோ¬ வக்கு ரூ.5 கோடியும், ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.25 கோடியும் வறட்சி நிவார ணத் தொகை

வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நானும், மாவட் ட வருவாய் அலுவலரும் போராடி திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.76 கோடி நிவாரணத் தொகையை பெற்றுத் தந்துள்ளோம். விவசாயிகளுக்காக மா வட்ட நிர்வாகம் எப்« பாதும் சிறப்பாக தான் செயல்பட்டு வருகிறது. சில தவறுகள் நடக்கலாம். இன்று (நேற்று) கூட்டத்திற்கு கோட்டாட்சியர்கள், தாசில்தார்கள் வராததற்கு காரணம் வறட்சி நிவாரணப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருப்பது தான். ரூ.76 கோடி உரியவர்களிடம் சேர வேண்டும் அதற்கான பணிகளில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது என்றார். தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி பேசுகையில், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் நிவாரணத் தொகை சேர வேண்டும் என்பதால் தான் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. கோ ட்டாட்சியர்கள் த¬ லமையில் குழு அமைத்து இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்« ளாம். உண்மையிலேயே பாதி க்கபட்டு பயனாளிகள் பட்டியலில் விடுபட்டிருந்தால், விண்ண ப்பிக்கலாம், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தாசில்தார் அலுவலகங்களில் பயனாளிகள் பட்டியல் இருக்கும். அங்கு சென்று தங்கள் பெயர்கள் உள்ளனவா என்று சரிபார்த்துக்கொள்ளலாம். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் வறட்சி நிவாரணம் பெறும் விவசாயிகள் பட்டியல் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.

### விவசாயிகளின் பெயர் களையும் பயனாளிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும்

கலெக்டர்: ஜமாபந்திக்கு காவல்துறை அதிகாரிகள் வர வேண்டும் என்பது அவசியமில்லை. எது தொ டர்பான மனு என்று என்னிடம் தெரிவித்தால், விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈஸ்வரமூர்த்தி (விவ சாயி): பழைய அமராவதிப் பாசனம், புதிய அமராவதிப் பாசனத்திக்கு உள்பட்ட உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், பழனி உள்ளிட்ட பகுதி கரும்பு விவசாயிகள் 6,500 ஏக்கர் அளவுக்கு அமராவதி கூட் டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்க முன்பதிவு செய்வது வழக்கம்.

இந்தாண்டு வறட்சி காரணமாக 2 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு மட்டும் கரும்பு விவசாயிகள் முன்பதிவு செய்திருந்தனர். இதில் 50 சதவீதம் காய்ந்துபோனது. இந்நிலையில், அமராவதி சர்க்கரை ஆலை நிர்வாகம் முன்பதிவு செய்யப்படாத விவசாயிகளிடமும் கரும்பு கொள்முதல் செய்தது.

இதற்காக, தனியார் சர்க்கரை ஆலைகள் இப்பகுதிகளில் கரும்பு கொள்முதல் செய்யக்கூடாது

எனக்கூறி தடுத்து, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மட்டும் கரும்பு கொள்முதல் செய்தது. விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ.1,800 விலை கிடைத்தது(வெட்டுக்கூலி ரூ.550 நீங்கலாக). இந்நிலையில், சர்க்கரைச் சத்து தன்மை 9.6 சதவீதத்துக்கும் குறைவாக 6.5 சதவீதம் மட்டும் இருப்பதாகக் கூறி, அமராவதி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு கொள்முதல் செய்வதை கடந்த 10ம் தேதி நிறுத்திக்கொண்டது.

இதனால் 5 ஆயிரம் ஏக்கரில் கரும்பு வெட்டப்படாமல் காய்ந்து வருகிறது. தற்போது தனியார் சர்க்கரை ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு விலையாக ரூ.1000 மட்டும் தருகின்றன. வேறுவழியில்லாமல் கரும்பு விவசாயிகள் கிடைத்த விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது, என்றார்.

கலெக்டர்: இது குறித்து முன்னதாக விவசாயிகள் என்னுடைய கவனத்துக்கு கொண்டுவந்திருந்தால் உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் இதுபோன்ற சூழ்நிலைகளில் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு பிரச்னையை கொண்டு வந்திருந்தால் கரும்பு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டிருக்க முடியும். இனி வரும்காலத்தில் இதுபோன்ற நிலை ஏற்படாமல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

ஈஸ்வரன் (விவசாயி): அரசு கொப்பரைக் கொள்முதல் செய்வதன் மூலமாக ஒரு தென்னை மரத்துக்கு ஒரு மாதத்திற்கு ரூ.20 என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு பயன் கிடைக்கிறது. கொப்பரைக் கொள்முதல் செய்வதால் அரசுக்கு கூடுதல் செலவு, வேலைப்பளு உண்டாகிறது. இதற்கு பதிலாக, மாதந்தோறும் ஒரு தென்னை மரத்துக்கு ரூ.20 வீதம் அரசு மானியமாக அனைத்து தென்னை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். தற்போது கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து கொப்பரை கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பாபு (இணைப்பதிவாளர்): மீண்டும் கொப்பரைக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இனி கிலோ ரூ.51 விலையில் இருந்து ரூ.52.50க்கு கொள்முதல் செய்யப்படும் என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

23.05.2013 A.M

## நாமக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சி: குடிநீர் பற்றாக்குறையை போக்க ரூ.4¾ கோடி நிதி ஒதுக்கீடு

நாமக்கல்,

நாமக்கல் மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறையை போக்க தமிழக அரசு ரூ.4 கோடியே 70 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது.

குடிநீர் பற்றாக்குறை

நாமக்கல் மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை போக்க இம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளுக்கு ஆழ்குழாய் கிணற்றுடன் கைப்பம்பு அமைக்க 24 பணிகளுக்கு ரூ.23 லட்சத்து 40 ஆயிரமும், ஆழ்துளை கிணற்றுடன் விசைப்பம்பு அமைக்க 65 பணிகளுக்கு ரூ.1 கோடியே 55 லட்சமும், 32 சின்டெக்ஸ் தொட்டிகள் அமைக்க ரூ.26 லட்சத்து 30 ஆயிரமும், திருச்செங்கோடு நகராட்சிக்கு தனி மின்னூட்டப் பாதை அமைக்க ரூ.66 லட்சமும், அரசு நிதி ஒதுக்கி உள்ளது.

மேலும் நாமக்கல் மாவட்டத் தில் உள்ள 19 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்து தல் பணிகளை மேற்கொள்ள, போர்வெல், மினிபவர் பம்பு, சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் பைப்லைன் விஸ்தரித் தல் பணிகளுக்கு ரூ.1 கோடியும் அரசிடம் பெறப்பட்டுள்ளது. அதேபோன்று நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 322 ஊராட்சிகளில் குடிநீர் வழங் குதல் மற்றும் குடிநீர் விநியோ கத்தை மேம்படுத்துதல், போர் வெல், மினி பவர் பம்பு, சின் டெக்ஸ் தொட்டிகள் அமைத் தல் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணி களுக்கு ரூ.1 கோடி அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

ரூ.4¾ கோடி நிதி ஒதுக்கீடு

தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.4 கோடியே 70 லட்சத்து 70 ஆயி ரம் நிதியை கொண்டு நகராட் சிகள், பேரூராட்சிகள், ஊராட் சிகளில் குடிநீர் பிரச்சினை உள்ள பகுதிகளில், தேவை யான பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற் கொண்டு, பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு உண்டான நட வடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் ஜெக நாதன் ஒரு செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை தீவன வளர்ப்புக்கு ரூ.21 கோடி நிதி ஒதுக்கீடு கலெக்டர் தகவல்

திருவண்ணாமலை,

திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை தீவன வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்த ரூ.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்று கலெக்டர் விஜய் பிங்ளே கூறி உள்ளார். இதுகுறித்து கலெக்டர் விஜய் பிங்ளே வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

கால்நடை தீவன வளர்ப்பு

தமிழகத்தில் சென்னையை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களையும் வறட்சி யால் பாதிக்கப்பட்ட மாவட் டங்களாக முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிவித்து உள்ளார். பருவ மழை பொய்த்ததால் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்கும் வகையில் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு கால்நடை தீவன வளர்ப்பு திட்டத்தை அறிவித்து உள்ளார். இந்த திட்டத்தின் கீழ் தீவன வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

ரூ.21 கோடி ஒதுக்கீடு

இதற்காக திருவண்ணா மலை மாவட்டத்துக்கு ரூ.21.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1,600 ஏக்கர் பரப்பளவில் தீவன வளர்ப்பு திட்டம் செயல் படுத்த திட்டமிடப் பட்டு உள்ளது. எனவே, விவசாயிகள் 50 சதவீதம் மானியத்தை பெற்று தங்களுடைய நீர்பாசனம் உள்ள நிலங்களில் குறைந்த கால பயிரான தீவன சோளம் பயிரிடலாம். தேவைக்கும் அதிகமான பசுந்தீவனத்தை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம் கொள்முதல் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 400 ஏக்கரில் தீவன அபிவிருத்தி திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் கால்நடை வளர்ப்போர் தங்கள் நிலத்தில் 25 சென்ட் முதல் ஒரு ஏக்கர் வரை தீவன சோளம்

மற்றும் காராமணி தீவன பயிர்களை பயிரிடலாம். 25 சென்டுக்கு ரூ.2 ஆயிரமும், ஒரு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரமும் மானியமாக வழங்கப்படும்.

<u>மானிய விலையில்</u>

தீவன பயிர்களை உற்பத்தி செய்ய, சிக்கனமான நீர்ப் பாசனத்துக்கு நீர் தெளிப்பான் கருவியை 75 சதவீத மானிய விலையிலும், பயிரிடப்பட்ட தீவன புல்களை வெட்டுவதற்கு மின்சக்தியால் இயங்கும் புல் நறுக்கும் கருவியை 75 சதவீத மானிய விலையிலும் வழங்கப்படும்.

அதிக அளவில் தீவனம் உற்பத்தியானால், அவற்றை பதப் படுத்தி தீவன பற்றாக் குறை காலங்களில் பயன் படுத்து வதற்காக ஊறுகாய் புல் தயாரிக்கும் திட்டத்துக்கும் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. எனவே, இதுகுறித்த விவரங் களை கால்நடை மருந்தகம் மற்றும் நிலையங்களை விவ சாயிகள் தொடர்பு கொள்ள லாம். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் தகவல்

கோட்டூர்,

புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயி கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என்று வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா கூறினார்.

<u>கலந்துரையாடல்</u>

கோட்டூர் அருகே உள்ள பெருகவாழ்ந்தான் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்க லைக்கழகம் மற்றும் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் பங்கு பெற்ற கலந்து ரையாடல் மற்றும் மாவட்ட அளவிலான வேளாண்மை கருத்துக் காட்சி நடைபெற் றது.

விழாவிற்கு மாவட்ட கலெக் டர் சி.நடராசன் தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண்மை இணை இயக் குநர் அ.கணேசன் வரவேற் றார். விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர் சந்தீப் சக்சேனா கலந்து கொண்டு பேசினார்.

<u>பசுந்தாள் உரம்</u>

அப்போது அவர் கூறியதா வது:–

தமிழ்நாட்டில் உணவு உற் பத்தில் டெல்டா மாவட்டத் தில் 45 சதவீதமும் திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 25 சதவீதமும் பெறப்படுகிறது. ஏற்கனவே விவசாய புரட்சி நடந்தபோது உரங்களை பயன் படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென விவசாயிகளை வலியுறுத்தினோம். தற்போது கால மாற்றத்தாலும், மண் ணின் தரம் குறைந்து வருவதா லும் மண்வளத்தை பெருக்க வும், அதற்கு ஊட்டம் கொடுக் கவும் வேண்டிள்ளது. எனவே, நாம் பசுந்தாள் உரங்களை இட வேண்டும். மண்ணில் சத்து இருந்தால் தான் நல்ல மகசூல் கிடைக்கும். நல்ல மகசூல் கிடைத்தால் தான் வருமானம் பெருகும். விவசாயிகளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்பதற்காக தான் இங்கு கருத்தரங்கம் நடைபெறு கிறது.

<u>மழைநீர் சேகரிப்பு</u>

திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட கலெக்டரின் முயற்சி யால் அனைத்து குளங்கள், குட்டைகளிலும், மழை நீர் சேமிப்பு மற்றும் தண்ணீர் செறிவூட்டும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. தமிழக அரசு விவசாயிகளுக் காக பல்வேறு திட்டங்களை நடைமுறை படுத்தி வருகிறது. புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

<u>கலந்து கொண்டவர்கள்</u>

விழாவில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, சென்னை வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், ஆராய்ச்சிக்குழு உறுப்பினர் மன்னார்குடி எஸ். ரெங்கநா தன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பி காபதி, கோட்டூர் ஒன்றியக் குழு தலைவர் ஜீவானந்தம் மற்றும் வேளாண் விஞ்ஞானி கள் கலந்து கொண்டனர். முடிவில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன் நன்றி கூறினார்.

## பயிர்கள் வறட்சியை தாங்கி வளர உயிர்உரம் பயன்படுத்த வேண்டும் தோட்டக்கலை துறை வேண்டுகோள்

உடுமலை,

பயிர்கள் வறட்சியை தாங்கி வளர உயிர் உரம் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு தோட்டக் கலை துறை வேண்டுகோள் விடுத்து உள்ளது. இது குறித்து உடுமலை வட்டார தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் பா.இளங்கோவன் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

உயிர் உரங்கள்

தோட்டக் கலை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மண்ணில் வறட்சியை தாங்கும் திறனை அதிகரித்திட நன்மை செய்யும் உயிர் உரங்களை பயன்படுத்துவது நல்லது. இயற்கையில் அசோஸ்பை ரில்லம், பாஸ்போ பேக்டீரியா போன்ற நன்மை செய்யும் உயிரினங்கள் மண்ணில் போதிய அளவில் இல்லாததால் பயிர்கள், வறட்சி மற்றும் நோயுடனும் போராட இயலாத வலிமை குன்றிய நிலை ஏற்படுகிறது.

இதற்கு வெளியில் ஆய்வுக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான உயிர் உரங்களை அரசு மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிறது. வெங்காயம், தக்காளி போன்ற பயிர்களில் மகசூல் குறையாதவாறு வறட்சி காலத்தில் செடி திறனுடன் வளர உயிர் உரங்கள் உதவுகின்றன.

வளர்ச்சியை அதிகரிக்கும்

தோட்டக்கலை துறை மூலம் கடந்த ஆண்டு எலையமுத்தூர், கல்லாபுரம் ஆகிய அயம்வாம் திட்ட கிராமங்களுக்கு இந்த உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. இது போல்மா, கொக்கோ போன்ற பயிர்களுக்கும் அரசு செலவில் உரங்கள் வழங்கப்பட்டன. பரவலாக வறட்சி ஏற்படும் போது அதை வெப்பதாக்குதல் என்பார்கள். இதனால் பயிர்கள் ஈரத்தை இழக்கும் நிலை ஏற்படும். இதை தவிர்க்க விவசாயிகள் அசோஸ்பைரில்லாம் நுண்ணுயிரை நன்கு விதை நேர்த்தி செய்தால் பயிரின் வேர்ப்பகுதியில் வைத்தால் அவை சென்று இளம் வேர்களின் வளர்ச்சியை அதிகரிக்கும். அதிக நீரை உறிஞ்ச உதவும். மேலும் தொழுஉரத்துடன் கலந்து இடும் போது இவற்றின் பெருக்கம் வெகுவாக அதிகரிக்கும்.

பலன் கிடைக்கும்

பொதுவாக மணிச்சத்து உரம் போட்டால் அடுத்து சாகுபடி செய்யும் பயிருக்கு தான் பலன் கிடைக்கும். மணிச்சத்து மெதுவாக கிடைக்கும் தன்மை உடையது. எனவே அந்த சத்து நிலத்தில் வேகமாக கிடைக்க பாஸ்போபேக்ட்ரியா உதவுகிறது. இதையும் தொழுஉரத்துடன் கலந்து இடலாம். நவீன ஆராய்ச்சியின் பயனாக தற்போது திரவ உரங்களாகவும் கிடைக்கிறது. இதனால் வீட்டில் வைத்து உள்ள எல்லா மரங்களுக்கும் பயன்படுத்தலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாகனேரி பகுதியில் வறட்சி நேரத்தில் வளம் தரும் நெல்லி விவசாயம்

பாகனேரி,

பாகனேரியை சுற்றி உள்ள பகுதியில் வறட்சி நேரத்திலும் வளம் கொடுக்கும் நெல்லி விவசாயத்தை விவசாயிகள் தேர்ந்தெடுத்து விவசாயம் செய்து வருகின்றனர்.

<u>நெல்லி விவசாயம்</u>

பாகனேரியை சுற்றி உள்ள மாங்காட்டுப்பட்டி, கவுரிப்பட்டி, கல்லல், முத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் நெல்லி பயிரிட்டு அதிக லாபம் அடைந்து வருகின்றனர். நெல்லி குறைந்த செலவில் அதிக லாபம் தருவதாலும், வறட்சியை தாங்கி செழித்து வளர்ந்து குறுகிய காலத்தில் அதிக லாபம் தருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் நெல்லியை பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர். விவசாயிகள் புஞ்சை பகுதியில் நெல்லி தோட்டத்தை அமைத்தும், சிலர் தோட்டங்களில் ஊடு பயிராக வாய்க்கால் ஓரம் மற்றும் வேலி ஓரங்களிலும் நெல்லியை பயிரிட்டு உபரி வருமானத்தை ஈட்டி வருகின்றனர். இந்த நெல்லியில் மருத்துவ குணம் அடங்கி உள்ளதால் விளைச்சலுக்கு வந்த நெல்லி கனிகளை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>அதிக லாபம்</u>

மேலும் மார்க்கெட்டில் நிர்ணய விலை கிடைப்பதால் விவசாயிகள் நெல்லி பயிரிடுவதில் அதிக விருப்பம் காட்டி வருகின்றனர். இதில் சிவப்பு நெல்லி எனப்படும் நெல்லியில் சில மருந்துகள் தயாரிப்பதால் இதற்கு அதிக வரவேற்பு உள்ளதாக நெல்லி தோட்டம் அமைத்துள்ள முத்துப்பட்டியை சேர்ந்த விவசாயி தைனீஸ் என்பவர் கூறினார்.

அவர் கூறுகையில், 'நெல்லி உரம், மருந்து என செலவில்லாமலும், அதைவிட அதிக தண்ணீர் தேவைப்படாமல் நெல்லி செடி கன்றாக இருக்கும் போது மட்டும் தண்ணீர் விட்டால் போதும். வருடம் ஒரு முறை கவாத்து செய்துவிட்டால் நெல்லிக்காய் காய்ப்பு நன்றாக இருந்து அதிக அளவில் பலனை தரும்' என்றார். இதனால் பாகனேரி, கல்லல் பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் நெல்லி தோட்டம் அமைத்து வருகின்றனர்.

## தேனி மாவட்டத்தில் தக்காளி விலை 'கிடு,கிடு' உயர்வு பொதுமக்கள் அதிர்ச்சி

ஆண்டிப்பட்டி,

தேனி மாவட்டத்தில் தக்காளி விலை 'கிடு,கிடு' வென உயர்ந்ததால் பொது மக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

<u>காய்கறிகள் விலை</u>

வெங்காயத்தின் விலை விண்ணை எட்டியதால் ஒரு மாநிலத்தின் தேர்தல் முடிவையே மாற்றிப் போட் டது. அத்தியாவசிய பொருட் களில் குறிப்பாக காய்கறிகளின் விலை உயரும் போது மக்கள் நேரடியாக பாதிக்கப்படு கிறார்கள். தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயப்பணிகள் அடியோடு பாதிக்கப்பட்டது. இதன்காரணமாக காய்கறிகள் விலை எந்த ஆண்டும் இல்லாத வகையில் தற்போது மிகவும் அதிகரித்து காணப்படுகிறது.

குறிப்பாக சின்னவெங்காயம் விலை கடந்த சில வாரங்களாக தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது. இதே போன்று அனைத்து காய்கறி களும் உயர்ந்து கொண்டே வந்தது. சமையலுக்கு அத்தியா வசியமான காய்கறிகளான தக்காளி, வெங்காயம் ஆகிய வற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவது அனைத்து தரப்பு மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. கடந்த வாரம் வரையில் சில்லறையில் ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.48 ஆக காணப்பட்டது. இந்த விலையே மக்களுக்கு அதிகம் தான்.

ரூ.60–க்கு விற்பனை

இந்நிலையில் தற்போது மேலும் ரூ.12 அதிகரித்து ஒரு கிலோ தக்காளி நேற்று ரூ.60–க்கு விற்பனை செய்யப் பட்டது. இதே போன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு வரையில் ரூ.60–க்கும் விற் பனை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் நேற்று ரூ.80–ஆக அதிகரித்தது. சமையலுக்கு அத்தியாவசியமான காய்கறிக ளான தக்காளி, வெங்காயம் விலை உயர்வு மக்களை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

தக்காளி, வெங்காயம் விளைச்சல் குறைந்து சந்தைக்கு வரத்து குறை வாகவே காணப்படுகிறது. மேலும் தற்போது தேவையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் முகூர்த்த நாட்கள் தொடங்கி உள்ளதால் தற்போது உள்ள விலை உயர்வு தொடரும் என்றும், குறைவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சில்லறை வியாபாரிகள் தெரிவித்தனர்.